ஓசை: 25 குரல்: 173 புதன்கிழமை 08 டிசம்பர் Wednesday 08th December 2021 Postbox : 1615 Phone: 011 7778700, 0117322760

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டட வேலைகள் இறுதிக்கட்டத்தில்
Commercial Bank, Colombo - 13
A/C Name: ISKCON Temple Fund
A/C No: 1120017042
Hatton National Bank - Colombo - 13
A/C Name ISKCON
A/C No: 207010000891
ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயம்
Fax:2470000, Email: iskcon@sl.lk Web: www.iskcon.lk

www.facebook.com/Thinakkural www.twitter.com/ThinakkuralNews email: daily@thinakkural.lk | www. thinakkural.lk

தினக்குரல்

தினக்குரல்

An Independent Daily Voice In Tamil

Registered in the Department of Post of Sri Lanka Under No.QD/151/ NEWS/2021

25 ANNIVERSARY

பக்கம்: 12 | விலை: 30

துணை இல்லம் கோகுலம்
ஆதரவற்ற சிறார்களுக்கு கல்வி, தங்குமிடம், சிறந்த எதிர்கால ஏற்றத்தாழ்வுக்குக் கருணை இல்லம் கோகுலம். பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்கள் பிறந்த நாள், அன்புக்குரியவர்களின் நினைவு தினம் போன்ற சந்தர்ப்பங்களில், நிகழ்வுகளுக்காவும் குச்சிறியாரின் ஒரு நாளுக்கான ஊட்டச்சுவை செலவு ரூபாய் 50,000 ஆகக் வழங்கி உதவலாம்.
நன்கொடை செலுத்த விரும்பும் Commercial Bank A/C No: 1005669901
A/C Name-ISKCON, Swift Code CCEYLKLX
Gokulam No: 607 A Negombo Road, Mabola, Wattala
Office: Sri Sri Radhakrishna Temple, No: 188, Newchetty Street, Colombo-13
Phone: 011 2433325, Email: iskcon@sl.lk

ரணிலால் சஜித்தின் பதவிக்கு ஆபத்து

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

பா. கிருபாகரன், ந. ஜெயகாந்தன்

வெளிநாட்டிலிருந்து திரும்பிய ரணில் பாராளுமன்றம் வந்தவுடன் தந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவி பறிபோய்விடுமோ என்ற அச்சத்தில் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச சபை அமர்வுகளில்

பக்கம் 02

வரவு- செலவு திட்ட விவாதத்திலும் பங்கேற்காது

இந்தியாவிற்கு பசில் சென்றது ஏன்?

சபைக்கு தெளிவுபடுத்தக் கோருகிறார் ரணில்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

இந்நாட்டில் நிதி அமைச்சர்களாக இருந்த எவரும் வரவு செலவு திட்ட விவரத காலத்தில் ஒரு பொரதும் வெளிநாடுகளுக்கு செல்லவில்லை. ஆனால் பசில் ராஜபக்ச வரவு செலவு திட்ட காலத்திற்குள் இந்தியாவிற்கு சென்றும் வந்து விட்டார். யாரிடமும் மண்டியிட்டு பணம் பெற்றுக்கொள்ள மாட்டோம் என அரச கூறும் அதே வேளையில் இந்தியாவிற்கு சென்ற நிதி அமைச்சர் அங்கு என்ன செய்தார். புத்தகயாவை வழிபட சென்றாரா? நிதி அமைச்சரின் இந்திய விஜயம் எதற்காக என்பது தொடர்பில் சபைக்கு தெளிவுபடுத்த வேண்டுமென முன்னாள்

பக்கம் 04

ஜனவரியில் புதிய பிரதமராக ரணில்!

எந்தவித உண்மையும் இல்லை என்கிறது அரசு

ந.ஜெயகாந்தன்

ஜனவரியில் பிரதமர் பதவியில் மாற்றம் மேற்கொள்ளவோ, ரணில் விக்கிரமசிங்கவுக்கு பதவியை வழங்குவதற்காகவோ எந்தக் கலந்துரையாடலும் நடக்கவில்லை என்றும், இது தொடர்பான செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என்றும்

பக்கம் 02

ஐ.ம.ச.உறுப்பினர்கள் இன்று முதல் சபை அமர்வுகளில் பங்கேற்க தீர்மானம்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பக்கம் 04

வடக்கில் 3 தீவுகளிலும் இந்தியாவுக்கு இடமில்லை

ந.ஜெயகாந்தன்

வடக்கில் மூன்று தீவுகள் தொடர்பான வேலைத்திட்டத்தை இந்திய நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று

பக்கம் 04

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி,ஐரோப்பிய ஒன்றியம்

தமிழ் தேசத்தின் இருப்பை அழிக்க உதவுகின்றனவா?

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றியமைத்து தமிழ் தேசத்தின் இருப்பை இல்லாமல் அழிப்பதற்கான வேலைத்திட்டங்களுக்காகவா உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி,ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட அமைப்புக்கள் இலங்கைக்கு

பக்கம் 04

வட, கிழக்கில் மட்டும் இப்படி ஒரு அராஜகம்

சித்தார்த்தன் எம்.பி. கடும் விசனம்

பா.கிருபாகரன், ந. ஜெயகாந்தன்

இடிந்த தமிழ் பாடசாலைக் கட்டிடங்கள் உள்ள இடங்கள்

பக்கம் 04

றம்புட்டான் பழத் தோற்றத்தையுடைய

ஒமிக்ரோன் திரிபின் 32 பிறழ்வுகள்

க.பிரசன்னா

ஒமிக்ரோன் கொவிட் திரிபின் 32 பிறழ்வுகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவை டெல்டா மற்றும் அல்பா திரிபுகளிலுள்ள பிறழ்வுகளை விடவும் அதிகமாகுமென கொழும்பு மருத்துவ

பக்கம் 02

இன்றும் ஒரு மணி நேர மின்வெட்டு

க.பிரசன்னா

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் புனரமைப்பு பணிகள் நிறைவுறும் வரையில் இன்றும் ஒரு மணித்தியால மின்வெட்டினை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

பக்கம் 02

2 ஆவது நாளாகவும் எதிர்க்கட்சி புறக்கணிப்பு விவாதம் இன்றியே விடயங்கள் நிறைவேற்றம்

அரசுக்கு கை கொடுத்த சில எதிரணி எம்.பி.க்கள்

பா.கிருபாகரன், ந. ஜெயகாந்தன்

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதம் நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாகவும் இடம்பெறாத நிலையில் திருத்தங்கள், தெளிவுபடுத்தல்களுடன் அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள்

பக்கம் 04

கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அனைவரும் கைது

பிரியந்த குமார தியவதனவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தானின் தகவல் மற்றும்

பக்கம் 02

பிரியந்தவின் குடும்பத்துக்கு பாகிஸ்தான் அரசால் இழப்பீடு

ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் வழங்கும்

கொடூரமாக தாக்கி கொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் குடும்பத்தாருக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் இழப்பீடு வழங்க பாகிஸ்தான் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அவரின் சம்பளத்தை மாதாந்தம் வழங்கவும் பாகிஸ்தான் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பக்கம் 02

இழுவை வலை படகுகளிடமிருந்து

நான் ஒரு இரவுக்கு 5000 ரூபா பெறுகிறேனா

பா.கிருபாகரன், ந. ஜெயகாந்தன்

வடக்கில் தொழிலில் ஈடுபடும் 500 இழுவை வலை படகுகளிடமிருந்தும் தான் ஒரு இரவுக்கு ஒரு படகிடமிருந்து 5000 ரூபா கப்பமாக பெறுவதாக, கமத்திரன் எம்.பி. தனது நிறப்புரிமையை பயன்படுத்தி இந்த சபையில் கூறியிருந்தார். அவர் முடியுமானால் இந்தக்கருத்தை பொறுமெவளியில் ஊடகங்களுக்கு சொல்ல முடியுமா வெனகடல்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சவால் விடுத்தார்.

பக்கம் 04

NLB
இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு 150 மில்லியன்
மெகா பவர்
MEGA POWER
மேகா பவர்
மெகா பவர்
பவர் சுப்பர் பரிசு Rs. 10,000,000.00
கிறாண்ட் சுப்பர் பரிசு Rs. 10,000,000.00
தேசிய லொத்தரி சபை
National Lotteries Board

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுனின் கரட் எதுவாயினும்
முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது
ரூ.87,000/=
• அதிவேட்ட இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உபசார சேவை
• சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
செலான் வங்கி

வட மேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே காலமானார்

வட மேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே தனது 83 ஆவது வயதில் காலமானார்.

வட மேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே தனது 83 ஆவது வயதில் காலமானார்.

வட மேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரேவுக்கு கொரோனா வைரஸ் (கொவிட் 19)

பக்கம் 04

18 வயதுக்கு குறைவான சிறுவர்களை வீட்டு பணியாட்களாக வேலைக்கு அமர்த்த முடியாது

பேராசிரியர் அ.சர்வேஸ்வரன்

18 வயதுக்கு குறைவான சிறுவர்களை வீட்டு பணியாட்களாக வேலைக்கு அமர்த்த முடியாத வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

வீட்டு பணியாட்களாக சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான வயது பற்றிய சட்டத்துக்கு அண்மையில் கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டம் பற்றி பல்லைக்கழக சட்டப் பேராசிரியர் பேராசிரியர் அ.சர்வேஸ்வரனிடம் கேட்டபோது, 2021 ஆம் ஆண்டு ஜனவரிக்கு முன்னர் 14 வயதுக்கும் மேற்பட்ட சிறுவர்களை வீட்டு வேலைக்கு அமர்த்த முடிந்தது எனவும் பின்னர் 2021 ஜனவரியில் கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டத்தால் இந்த வயதானது 16 ஆக அதிகரிக்கப்பட்டது எனவும் கடந்த நவம்பர் 18 ஆம் திகதியன்று அறிமுகப் படுத்தப்பட்ட ஒழுங்கு விதிகளின்படி, சிறுவர்களை வீட்டு பணியாட்களாக வேலைக்கு அமர்த்துவதற்கான ஆக்குறைந்த வயதானது, 18 வயதாக அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் விளக்கையில், பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான சட்டத்தின் கீழ் 18 வயதுக்கும் குறைவான சிறுவர்களை வேலைக்கு அமர்த்த தடை செய்யப்பட்ட ஆபத்தான வேலைகள் பற்றிய ஒழுங்குவிதிகள் 2021 நவம்பர் மாதம் 18 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இந்த ஒழுங்கு விதிகளில் வீட்டு பணியாட்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன். இதற்கமைய இன்றுள்ள சட்டத்தின்படி 18 வயதுக்கும் குறைவான வயதுள்ள சிறுவர்களை வீட்டுப்பணியாட்களாக வேலைக்கு அமர்த்த முடியாது என்றார்.

குழந்தைகள் பிறந்த உடனேயே பிறப்புச் சான்றிதழுடன் தேசிய அடையாள இலக்கம்

ந.ஜெயகாந்தன்

குழந்தைகள் பிறந்த உடனேயே அவர்களின் பிறப்புச் சான்றிதழுடன் தேசிய அடையாள இலக்கத்தை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையில் பிறக்கும் எந்த வொரு பிள்ளையும் பிறப்பின் போது பதிவு செய்து அப்பிள்ளைக்கு தேசிய பிறப்புச் சான்றிதழை வழங்கும் அதிகாரம் பிறப்பு மற்றும் இறப்பைப் பதிவு செய்யும் சட்டத்திற்கமைய பதிவாளர் நாயக நிணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1968 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஆட்களைப்பதிவு செய்யும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தேசிய ஆட்கள் பெயர்ப்பட்டியலை பேணுதல் மற்றும் 15 வயதை அடைந்தவர்கள் மற்றும் அடையவுள்ள இலங்கைப் பிரஜைகளின் விண்ணப்பத்திற்கமைய அவர்களைப் பதிவு செய்து தேசிய அடையாள அட்டையை வழங்குதல், ஆட்பதிவுத் நிணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 2006 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வெளியிடப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் (இலங்கை அடையான இலக்க) கட்டளையின் பிரகாரம் அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் இலங்கை அடையாள இலக்கத்தை வழங்குவதற்காகவும் ஆட்பதிவுத் நிணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒரே அடையாள இலக்கத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பிறப்பிலிருந்து இறப்பு வரைக்கும் மேற்கொள்ளும் செயற்பாடுகளின் போது குறித்த நடவடிக்கைகளை இலகுவாகவும் விரைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு இலங்கையர்களுக்கு வருங்கால லங்களில் வாய்ப்புக் கிடைக்கும்.

அதற்கமைய, ஆட்பதிவுத் நிணைக்களத்தின் தகவல் தொகுதி மூலம் இணைய வழியூடான இலங்கை அடையான இலக்கத்தை பதிவாளர் நாயகத் நிணைக்களத்திற்கு வெளியிடுவதற்கும், குறித்த இலக்கத்தை உள்ளடக்கி பதிவாளர் நாயகத் நிணைக்களத்தின் மூலம் குறித்த நபர்களின் பிறப்புச் சான்றிதழை வழங்குவதற்கும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எரிவாயு சிலிண்டர் களஞ்சியசாலையை அகற்றக் கோரி யாழில் போராட்டம்

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியிலுள்ள கொட்டடி பகுதியில் அமைந்துள்ள எரிவாயு சிலிண்டர் களஞ்சியசாலையை அவ்விடத்தில் இருந்து அகற்றுமாறு மக்கள் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

நேற்றுக் காலை 9 மணிக்கு அந்தப் பகுதி பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதன் போது எமது உயிருக்கு யார் உத்தரவாதம், நாம் ஆரோக்கியமான சந்தியாய் வாழ வழிவிடு, தரமற்ற எரிவாயுக் கசிவால் ஏற்படும் ஆபத்துக்கு யார் பொறுப்பு என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்திவிருந்தனர்.

ஜே / 81 கிராம சேவகர் பிரிவை சேர்ந்த மக்கள் ஸ்ரீமீனாட்சிவணமுக நிலையம் ஊடாக இந்த களஞ்சியசாலை மூலம் கற்றுச் சூழல் மாசு ஏற்பட்டு உள்ளதாகவும், களஞ்சியசாலைக்கு முன்பாக கனரக வாகனங்கள் திறுந்தி வைக்கப்படுவதனால், போக்குவரத்து இடைஊறு ஏற்படுவதாகவும், குறிப்பாக அருகில் உள்ள பாடசாலைக்கு நடந்து செல்லும் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டு, உடனடியாக அங்கிருந்து குறித்த களஞ்சியசாலையை அகற்றுமாறு, யாழ்ப்பாண பிரதேச செயலர், யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர், நகர அபிவிருத்தி அதிகார சபை பிரதிப்பணிப்பாளர் மற்றும் மத்திய கற்றாடல் அதிகார சபை பிரதிப்பணிப்பாளர் உள்ளிட்டோருக்கு இந்த ஆண்டு ஆரம்பத்தில் யுதம் மூலம் கோரிக்கை விடுத்து இருந்தனர்.

அதேவேளை அப்பகுதி மக்களின் முறைப்பாட்டை அடுத்து நகர அபிவிருத்தி அதிகார சபை, எரிவாயு களஞ்சியத்தின் பாதுகாப்பு ஒழுங்குகள் அவலவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்ள வேண்டும். ஆதனத்திற்குள் வாகனங்கள் தரித்து நிற்பதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் கட்டடத்திற்கான அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறப்பட்டிருந்தால் அதனை சமர்ப்பிக்க வேண்டும் என குறித்த களஞ்சியசாலை உரிமையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

வீடொன்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் உள்ள தவியார் வீடொன்றில் இருந்து வெடிபொருட்கள் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் இருந்து இரத்தினபுரம் செல்லும் வீதியில் உள்ள நீர் தங்கிக்கு முன்புள்ள தவியார் வீட்டில் ஆள் நடமாட்டங்கள் இல்லாமையினால் அவ் வீட்டில் இனம் தெரியாதவர்களினால் பழைய 30 ஏகே ரவைகள் மற்றும் 3 ஏகே 47 துப்பாக்கிக்குரிய மகசீன்கள் என்பன வைக்கப்பட்டுள்ளதாக வீட்டின் உரிமையாளர் இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

மகாவலி அதிகார எல்லைக்குட்பட்ட காணிகள் நீண்டகாலக் குத்தகைக்கு

முதலீட்டாளர்களுக்கு வழங்க அரசு தீர்மானம்

ந.ஜெயகாந்தன்

மகாவலி அதிகார எல்லைக் குட்பட்ட காணிகளை நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தேசிய போசாக்கு மற்றும் உணவுப்பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட வணிக விவசாயக் கருத்திட்டங்களுக்காக குறித்தக் காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொவிட் 19 தொற்று நிலைமையில் உணவு இறக்குமதிக்காக அந்நிய செலாவணி வெளிநாடுகளுக்கு இழுத்துச் செல்லப்படுவதால் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படும் எதிர்மறை விளைவுகளைக் குறைக்கும் நோக்கில் உள்ளூரில் பயிரிடக்கூடிய அத்தியாவசிய உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதேபோல், உள்ளூர்பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், கால்நடைத் தீவனங்களை உள்ளூரில் உற்பத்தி செய்யும் தேசிய உணவு உற்பத்தி நோக்கவிப்பு, கொள்கைப் பிரகடனத்தின் நோக்கமாகக் உள்ளது. அதற்கமைய, தேசிய போசாக்கு மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட வணிக விவசாயக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மகாவலிப் பிரதேசங்களில் அமைந்துள்ள 1,%50 ஹெக்டயர் காணிகளை முறையான பொதிமுறையைக் கையாண்டு தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களுக்கு நீண்டகாலக் குத்தகையின் அடிப்படையில் வழங்குவதற்கு அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாநிலத்தின் சியால்கோட் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை பஞ்கொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரதியவனனின் மரணத்துக்கு நீதிவேண்டி நேற்று செல்வாம்க்கிழமை கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகத்திற்கு முன்னால் 'மக்கள் பொறுப்பு மையம்' ஏற்பாடு செய்திருந்த கவனயீர்ப்பு போராட்டத்தின் போது... படப்பிடிப்புஎஸ்.சிரமேஷ்

ரணிலால்...

முன்பக்கத் தொடர்ச்சி...

பங்கேற்பதாக தெரிவித்துள்ளதாக அரசதரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை, எதிர்க்கட்சிகளின் சபை அமர்வு புறக்கணிப்பு தொடர்பில் முன்னாள் பிரதமரும் ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் தனது கருத்தை முன்வைத்த போதே இவ்வாறு தெரிவித்த அரசதரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் கூறுகையில்,

ரணில் விக்கிரமசிங்க இங்கு கருத்துக் கூறிக்கொண்டிருக்கும்போது எனக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது.அதில் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசதானை முதல் (இன்றுமுதல்)சபை அமர்வுகளில் பங்கேற்பதாக சபாநாயகருக்கு தெரியப்படுத்திவிருப்பதாக கூறினார்கள்.

ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு சென்றதால்தான் சஜித் பிரேமதாச தைரியமாக சபை அமர்வை புறக்கணித்தார். தற்போது ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பி பாராளுமன்றம் வந்துள்ளதால் எங்கே தனது எதிர்க்கட்சித்தலைவர் பதவிக்கு ஆபத்து வந்து விடுமோ என்ற அச்சம் சஜித் பிரேமதாசாவுக்கு ஏற்பட்டுவிட்டது. அதனால்தான் அவர் சபை அமர்வுகளில் பங்கேற்பதாக அறிவித்துள்ளார் என்றார்.

ஜனவரியில்...

முன்பக்கத் தொடர்ச்சி...

அமைச்சரவை இணை பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் நிணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜனவரி மாதமளவில் பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படவுள்ளதாக கருத்துக்கள் நிலவுகின்றன. இதற்காக பஸில் ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரின் பெயர்கள் கூறப்படுகின்றன. சர்வதேச தொடர்புகள் மற்றும் வெளிநாட்டு கடன்களை பெற்றுக் கொள்வதற்கான நோக்கத்திலேயே ரணிலை நியமிக்கவுள்ளதாக கூறப்படுகின்றது. இது தொடர்பாகஎன்ன நிலைப்பாட்டில் இருக்கின்றீர்கள் என்று ஊடகவியலாளர் கேள்வியெழுப்பினார். அதன்போது பதிலளித்த அமைச்சர் கூறுகையில்,

இந்த கேள்வியில் எந்தவித அடிப்படைதும் கிடையாது. அவ்வாறாக எந்தக் கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை. இதில் எந்தவொரு உண்மையும் கிடையாது.

பிரியந்தவின்...

முன்பக்கத் தொடர்ச்சி...

இதனிடையே, பிரியந்த குமாரமீது தாக்குதல் மேற்கொண்டபோது, அவரின் உயிரைக் காக்க முயன்றமலிக் அத்னானுக்கு, பாகிஸ்தான் பிரதமரால்,துணிச்சலுக்கான விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் சியால்கோட்டில் கொடூரமான முறையில் தாக்கி கொலை செய்யப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவின் குடும்பத்திற்கு 2.5 மில்லியன் ரூபா பணத்தை வழங்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

புலம்பெயர் பணியாளராக 11 வருடங்களுக்கு மேல் இலங்கை பொருளாதாரத்திற்கு பிரியந்த குமார வழங்கிய ஒத்துழைப்பை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சியால்கோட்டிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் பொது முகாமையாளராக கடமையாற்றிய பிரியந்த குமார, கடந்த 3 ஆம் திகதி கொடூரமான முறையில் தாக்கி எரிபூட்டி கொலை செய்யப்பட்டார்.

அன்னாரின் அஸ்தி பாகிஸ்தானிலிருந்து கொழும்பு வரப்பட்டு, கனேமுல்லையிலுள்ள அவருடைய வீட்டிற்கு நேற்று அதிகாலை கொண்டு செல்லப்பட்டது.

இந்த கொலை தொடர்பில் இதுவரை நூற்றுக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

றம்புட்டான்...

முன்பக்கத் தொடர்ச்சி...

ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரஸ் தொடர்பான திணைக்களத்தின் டொக்டர் ஜூட் ஜயமஹா தெரிவித்துள்ளார்.

டெல்டா வைரஸ் நிரிபின் 23 பிறழ்வுகளும் அல்பா வைரஸ் நிரிபின் 8 பிறழ்வுகளும் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் தம்புட்டான் பழத்தின் தோற்றத்தினையுடைய ஒமிக்ரோன் கொவிட் நிரிபின் 32 பிறழ்வுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை டெல்டாவினை விட பரவும் அபாயம் மிக்கதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

சமூகத்தில் பரவும் ஒமிக்ரோன் தொற்று மற்றும் தனிநபர்கள் மீதான அதன் விளைவுகள் குறித்து உறுதியான அறிக்கையை வெளியிட போதுமான தரவு இல்லை. தொற்றின் பாதிப்பு தொடர்பில் உறுதியான தகவல்கள் கிடைக்கும் போதே உண்மையான தகவல்களை வெளியிட முடியும். எனினும் ஒமிக்ரோன் தொற்றுடன் தொடர்புடைய மரணங்கள் இதுவரை பதிவு செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் தொடர்ச்சியாக 700 க்கும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் நிலையில் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படவில்லையென சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நாட்டில் கடந்த நவம்பர் 9 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 700 க்கும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேவேளை நவம்பர் 4 ஆம் திகதி முதல் 15 - 30 வரையான கொவிட் மரணங்களும் பதிவு செய்யப்படுகின்றன.

இன்றும்...

முன்பக்கத் தொடர்ச்சி...

மாலை 6 மணிமுதல் இரவு 9.30 மணிவரையான காலப்பகுதியில் ஒரு மணிநேர மின்வெட்டினை அமுல்படுத்துவதற்கு நீர்வாழனிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் பேச்சாளர் கலகுன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

மின்வெட்டு மேற்கொள்ளப்படும் பகுதிகள் தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும், தேவைப்படும் போது மின்வெட்டு மேற்கொள்ளப்படும். நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்றில் இரண்டு பங்குமின் உற்பத்திகள் புனரமைக்கப்பட்டுள்ள தாகவும் மூன்றாவது ஜெனரேட்டரை மீண்டும் இயக்குவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் தேவைப்படும்.

தடையில்லா மின்சாரம் வழங்குவது எமது கடமையாகும். ஆனால் இக்காலப்பகுதியில் நுகர்வோர் மின்சாரத்தினை சிக்கனமாக பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். ஒரு வீட்டில் ஒரு விளக்கை அணைக்க முயற்சித்தால் 7 மில்லியன் விளக்குகளை அணைக்க முடியும். இப்பழக்கத்தை நம் வாழ்வின் ஒரு பகுதியாக மாற்ற வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நுரைச்சோலை அனல்மின் நிலையம் மீளமைக்கப்படும் வரை நாட்டின் பல பகுதிகளுக்கான மின்சார விநியோகத்தை குறைத்து ஒரு மணித்தியாலத்திற்கு இடைநிறுத்தலாம் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அண்மையில் அறிவித்திருந்தது. நாடளாவிய ரீதியில் கடந்த 3 ஆம் திகதி மின்சாரம் தடைபட்டதை தொடர்ந்து நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் செயற்பாடுகளும் தடைபட்டிருந்தது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் வழங்கப்படும் 900 மெகாவாட் முழு கொள்ளளவையும் தேசிய மின்கட்டமைப்புடன் இணைப்பதற்கு மூன்று நாட்கள் ஆகுமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொலையுடன்...

முன்பக்கத் தொடர்ச்சி...

ஒலிபரப்பு அமைச்சர் சௌத்ரி பவாட் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலையை பாகிஸ்தானியர்கள் அனைவரும் கண்டித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மொஹான் விஜேவிக்கமவுடனான சந்திப்பின் போதே அமைச்சர் ஃபவாட் ஹுசைன் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தால் நாம் மிகுந்த வருத்தம் அடைவதாக அவர் கூறினார்.

பிரியந்த குமார தியவதன படுகொலை தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்தும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகருக்கு தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் விளக்கமளித்தார்.

இந்தத் துயரச் சம்பவம் தொடர்பில் பாகிஸ்தான் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சியடைவதாக உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

நாடு பேரழிவை நோக்கிச் செல்கிறது; பண்டிகைக் காலத்தில் பெரும் ஆபத்து

பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

மக்கள் சுகாதார ஆலோசனைகளுக்கு இணங்காத பட்சத்தில், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு பேரழிவை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையிலான பாதிக்கப்பட்டவர்கள் தினமும் கண்டறியப்படுவதாக அவர் கூறினார்.

எவ்வளவு சுகாதார ஆலோசனைகள் கொடுத்தாலும், எவ்வளவு அழுத்தமாக இருந்தாலும், ஏப்ரல், டிசம்பரில் இதே நிலைதான் தொடர்கிறது. எனவே இந்தப் பண்டிகைக் காலத்தை மக்கள் அதே போன்று கொண்டாட முயல்வதாகக் காணப்படுகின்றது. நாம் ஒரு பெரிய பேரழிவை நோக்கிச் செல்கிறோம். சமூகத்தின் பல பகுதிகளில் தொற்றுகள் பதிவாகி யுள்ளன. நாளாந்தம் ஊடகங்களில் வெளியாகும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை வைத்து இதை கற்பனை செய்து பார்க்க வேண்டாம். தரையிலுள்ள பெரும்பாலான சூழ்நிலைகள் ஆபத்தானவை. தோயாளிகள் அதிகளவில் பதிவாகி வருகின்றனர். எனவே தேவையற்ற பொதுக் கூட்டங்களை வைத்து சுகாதார அறிவுறுத்தலை மீறி இவ்விதம் பண்டிகைகளைக் கொண்டாட முனைந்தால் 2022ல் இந்தப் பேரழிவு சூழ்நிலையில் பாதி விலையைச் செலுத்த வேண்டியிருக்கும் என்பதை வலியுறுத்து கிறேன்.

எனவே, பொதுமக்கள் சுய தனிமைப்படுத்தல் சட்டத்தை நடைமுறைப் படுத்தி பண்டிகைகளைக் கொண்டாடு மாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இல்லையேல் நமக்கு நெருக்கமானவர்களை இழந்து விடுவோம். இல்லாவிட்டால், பண்டிகைக் காலத்தை தனிமைப்படுத்தல் மையங்களிலும், சிகிச்சை மையங்களிலும் கழிக்க நேரிடும் என்பதை வலியுறுத்துகிறோம்.

எதிர்காலத்தில் சுகாதார சட்டத்தை மீறி பொருட்களை விற்பனை செய்பவர்களுக்கு எதிராகவும் அவ்வாறான இடங்களுக்குள் பிரவேசித்து சுகாதார சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்படும் எனவும் உபுல் ரோஹன மேலும் தெரிவித்தார்.

மூதூர் பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் வெற்றி

முஸ்ஸிப்பொத்தானை, மூதூர் நிருபர்

மூதூர் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இருபது வாக்குகள் ஆதரவாக பெறப்பட்ட நிலையில் வெற்றிபெற்றுள்ளது.

மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எம்.ஏ.அருஸ் தலைமையில் நேற்று சபை கூடியது.

24 உறுப்பினர்களைக்கொண்ட இச் சபையில் மூன்று உறுப்பினர்கள் சமூகம் கொடுக்காத நிலையில் நல்லாட்சிக்கான தேசிய முண்ணியைச் சேர்ந்த உறுப்பினர் எதிராக வாக்களித்த நிலையில் பெரும்பான்மையாக இருபது வாக்குகள் அளிக்கப்பட்டு வரவு செலவுத் திட்டம் வெற்றிபெற்றது.

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் விபத்து

களுவாஞ்சிகுடி நிருபர்

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் பெரியகல்லாற்றில் திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளதுடன் கார், மற்றும் மூலங்கா ரெலிகொம் மின் கம்பத்திற்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இவ் விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது கொழும்பிலிருந்து கல்முனை நோக்கிப் பயணித்த கார் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குப்பட்ட பெரியகல்லாற்றில் வீதியை விட்டு விலகி மூ லங்கா தொலைத்தொடர்பு நிறுவனத்துக்குச் சொந்தமான கம்பத்தில் மோதியுள்ளது.

இதில் பயணித்த இருவரும் உயிர் தப்பியதுடன் அவர்கள் இருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு காயமடைந்த இருவரும் வைத்திய தம்பதிகளாவர்.

சம்பவ இடத்திற்கு வந்த களுவாஞ்சிகுடி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பிரியந்த குமாரவின் உடலுக்கு கர்தினால் இறுதி அஞ்சலி

க.பிரசன்னா

மதத்தின் மூலம் மக்களை சரியான பாதைக்கு கொண்டு செல்ல வேண்டுமெனவும் மதத்தினையும் அரசியலையும் இருவேறு விடயங்களாக கருத வேண்டுமெனவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், இது மிகவும் துரதிஷ்டவசமான சம்பவமாகும். மதத்தின் மூலம் மக்களை சரியான பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும் ஒரு மதத்தின் அடிப்படையில் இதுபோன்ற சம்பவங்கள் நடந்தால் அது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. ஏனென்றால் மதம் என்பது மக்களை சரியான பாதைக்கு அழைத்துச் செல்லும் அமைப்பு. எனவே நாம் ஒரு மதத்தை நம்பினால், இன்னொரு மனிதனுக்கு எதிராக கையை உயர்த்த முடியாது. அதைத்தான் தர்மம் சொல்கிறது.

எனவே இது மிகவும் துரதிஷ்டவசமான சம்பவம். எங்களின் ஆழ்ந்த அனுதாபங்கள். இதுபோன்ற செயல்களைச் செய்பவர்கள் பெரும்பாலும் அரசியலின் விளைவாக மதத்தைக் கையாள முயற்சிப்பதாகவே நாம் நம்புகிறோம். மதமும் அரசியலும் இரண்டு. அந்த உண்மையை கவனத்தில் கொள்ள வேண்டும். அதுவே எந்த நாட்டுக்கும் நல்லது எனவும் தெரிவித்துள்ளார்.

உலக வங்கி,...

முன்பக்கத் தொடர்ச்சி...

உதவிகளை வழங்குகின்றனவென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி.யான செல்வராசா கஜேந்திரன் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கற்றாட்டி அமைச்சு,வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு, மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு யானைவேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் ,உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீன் காடாக்கம் ,வளவன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு,அலங்கார மீன்கள்,நன்னீர்மீன்கள் ,இறால்களை வளர்த்தல் ,கடல்தொழில் துறைமுக அபிவிருத்தி ,பலநாள் கடல்தொழில் அனுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைக்க ஆகியவற்றின் மீதான விவாதம் இடம்பெற விருந்த போதும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் ஜே.வி.பி.யும் சபை அமர்வை இரண்டாவது நாளாகவும் புறக்கணித்ததால் விவாதத்தை சம்பிரதாயப்படி ஆரம்பிக்க முடியாத காரணத்தாலே நேற்றும் விவாதங்கள் இடம்பெறவில்லை.

இதே நிலை நிங்கட்கிழமை ஏற்பட்டபோது எதிர்க்கட்களான தமிழ் தேசியக்கட்டமைப்பின் எம்.பி. யான சாள்ஸ் நிர்மலநாதன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யான ஹரிஸ் , ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் எம்.பி.யும் அரச ஆதரவாளருமான டயானா கமகே ஆகியோர் இன்னொரு சிறிய குளத்தையும் இணைத்து காடழிக்கப்பட்டு ஒரு பாரிய குளம் அமைக்கப்பட்டு தமிழர்கள் விவசாயம் செய்து வந்த 300 ஏக்கர் வயல் நிலங்கள் உருவாக்கப்பட்டு நிங்கமடங்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள். அந்த விகாரைக்கு செல்வதற்காக இப்போது நெடுஞ்சலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோவின் ஆதரவோடு ஒரு காபட் வீதியும் அமைக்கப்பட்டு வருகின்றது

காடுகள், ஒதுக்க காடுகள் என்ற சட்ட திட்டங்களானது வடக்கு,கிழக்கை பொறுத்தவரையில் தமிழர்களின் நிலங்களை பறிமுதல் செய்து பெரும்பான்மையினத்தவர்களின் தேவைகளுக்காக கொடுத்து ஒரு இனக்கரைப்பு செய்வதன் மூலம் எமது இனத்தை இல்லாமல் செய்யும் ஒரு வேலைத்திட்டமே இங்கு நடைபெறுகின்றது. இந்த விடயத்தில் அமைச்சர்கவனம் செலுத்த வேண்டும். தமது பகுதிகளில் தமிழர்கள் முழுமையாக மீனக்குடியமர நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

ஒதுக்க காடுகளுக்குள் நிங்கவைக்கள் விரும்பியதை செய்வதையும் 6 அடிக்கு மேலாக மரங்கள் வளர்ந்துள்ளதால் அவை ஒதுக்க காடுகள் என்றும் கூறுவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது ,இது மிக மோசமான நிட்டமிட்ட நிங்கள பெளத்தம செயற்பாடு என்பதை இங்கு பதிவு செய்கிறேன். .

அடுத்ததாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்தை கிழக்கு துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 23803ஏக்கர் ஏனைய காடுகள் என்ற பகுதிகள் வரும் காடுகளை ஒதுக்க காடுகளாக புதிதாக அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இது உங்களின் கற்று நிருபங்களுக்கும் தீர்மானங்களுக்கும் முரணானது. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2021/2ஆம் இலக்கக்கற்று நிருபத்தின் பிரகாரம் காணி அமைச்சினால் பிரதேச செயலகங்களுக்கு ஏனைய காடுகள் என்பதனை நீங்கள் நிர்வாகம் செய்ய முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்த கற்று நிருபம் சொல்கிறது புதிதாக ஒதுக்க காடுகள் அறிவிக்கப்படுவதாக இருந்தால் அது தொடர்பாக ஒரு வரைபடம் தயாரிக்கப்பட்டு அந்த வரைபடம் பிரதேச செயலாளரால் அங்கிகரிக்கப்பட்ட பின்னர்தான் ஒதுக்க காடுகளை அறிவிக்க முடியுமென கூறப்படுகின்றது. ஆனால் அதனை மீறி இந்த நடைமுறைகள் எதுவும் இல்லாமல் வடக்கில்பாரிய அபிவிருத்திகளை தேவைப் படக்கூடிய,மக்கள் குடியிருப்புக்களை தேவைப்படக்கூடிய பகுதிகள் அவசர அவசரமாக ஒத்துக் காடுகளாக அறிவிக்கப் படுவது ஏன்?இதனை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி,ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட உங்களுக்கு உதவி செய்யும் அமைப்புக்களிடம் நான் கேட்க விரும்புவது என்னவென்றால் நீங்கள் இலங்கைக்கு உதவிகளை வழங்குவது தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றியமைத்து தமிழ் தேசத்தின் இருப்பை இல்லாமல் அழிப்பதற்காக வேலைத்திட்டங்களுக்காகவா எனக் கேள்வி எழுப்பினார்.

வட மேல்...

முன்பக்கத் தொடர்ச்சி...

கடந்த 3ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்டது.

இதனை அடுத்து அவர் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதுடன், சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் அவர் நேற்று அதிகாலை காலமானார்

வட மேல் மாகாண ஆளுநராக ராஜா கொல்லுரே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச முன்னிலையில் 2020 ஆகஸ்ட் 31 சத்திய பிரமாணம் செய்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வட, கிழக்கில்...

முன்பக்கத் தொடர்ச்சி...

கூட காட்டுப்பிரதேசங்கள் என்று ஒதுக்ப் படுவதுடன் 6 அடிக்கு மேற்பட்ட மரங்கள் ஒரு இடத்தில் இருக்குமென்றால் அந்த இடமும் காடாக ஒதுக்கப்பட்ட இடமாகவும் . அதே போல் கூகள் வரைபடத்தில் பார்த்து கொஞ்சம் பச்சை வட்டமாக இருந்தால் அதுவும் ஒரு காட்டு பிரதேசமாகவும் ஒதுக்கப்படும் அவலம் வடக்குகிழக்குமாகணங்களில்மட்டும் முன்னெடுக்கப்படுவதாக தமிழ் தேசிய கட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி. யான தா. சித்தார்த்தன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு, மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு யானைவேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் ,உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீன் காடாக்கம் ,வளவன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு,ஆகியவற் றின் மீதான கருத்தை முன் வைக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் கூறுகையில்,

வவுனியா வடக்கில் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வெடிவைத்தகல்லு பகுதியில் 1984 ஆம் ஆண்டு காலப்பகுதி யில் இராணுவம் ,ஊர்காவல்படைகளின் அச்சுறுத்தல் காரணமாக அங்கிருந்து மக்கள் வெளியேறி இருந்தார்கள் .அந்த மக்கள் மீளவும் அங்கு மீளக்குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் அந்தப்பகுதியில் பெரியகட்டுக்குளம் ஒதுக்க காடு என அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டன. யுத்தம் 2009 ஆண்டு முடிவடைந்த பின்னரும் அங்கு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் அப்பகுதி யில் கச்சல்சமளங்குளம் என்று சொல்லப்படுகின்ற இராமந்தோள் பெரியப்புலம் தென்னமாற்றம் செய்யப்பட்டு அங்கு பெரியதொரு 'சப்புமல்கல்கட.'என்ற விகாரையும் அமைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது இந்த பெரியக்கட்டிக்குளத்தையும் அதற்கு பக்கத்திலிருந்த

2 ஆவது நாளாகவும்...

முன்பக்கத் தொடர்ச்சி...

அரசினால் நிறைவேற்றப்பட்டன.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கற்றாட்டி அமைச்சு ,வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு,கடல் தொழில் அமைச்சு,மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு யானைவேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் ,உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீன் காடாக்கம் ,வளவன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு,அலங்கார மீன்கள்,நன்னீர்மீன்கள் ,இறால்களை வளர்த்தல் ,கடல்தொழில் துறைமுக அபிவிருத்தி ,பலநாள் கடல்தொழில் அனுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைக்க ஆகியவற்றின் மீதான விவாதம் இடம்பெற விருந்த போதும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் ஜே.வி.பி.யும் சபை அமர்வை இரண்டாவது நாளாகவும் புறக்கணித்ததால் விவாதத்தை சம்பிரதாயப்படி ஆரம்பிக்க முடியாத காரணத்தாலே நேற்றும் விவாதங்கள் இடம்பெறவில்லை.

இதே நிலை நிங்கட்கிழமை ஏற்பட்டபோது எதிர்க்கட்களான தமிழ் தேசியக்கட்டமைப்பின் எம்.பி. யான சாள்ஸ் நிர்மலநாதன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யான ஹரிஸ் , ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் எம்.பி.யும் அரச ஆதரவாளருமான டயானா கமகே ஆகியோர் அமைச்சுக்கள் ,இராஜாங்க அமைச்சுக்கள் மீதான கருத்துக்களை முன்வைத்த நிலையில் விவாதமின்றி நிதி ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்டன. அத்துடன் சபை அமரவும் 9 .30 மணிக்கு தொடங்கி 12.30 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

ஆனால் நேற்று இரண்டாவது நாளாகவும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் ஜே .வி.பியும் சபை அமரவு புறக்கணிப்பில் ஈடுபட்டதால் சம்பிரதாய முறைப்படி 10 நிமிடங்கள் வெட்டி விவாதத்தை ஆரம்பிக்க முடியாத நிலையில் விவாதம் இன்றியே அமைக்கக்கள். இராஜாங்க அமைச்சுக்கள் மீதான நிதி ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்ட அண்ணல் முதல் நாளை விட அதிகமாக தமிழ் தேசியக்கூட்டமைப்பு .ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தியின் பலமான கமகே எம்.பி தமிழ் தேசிய மக்கள் முன்னணி எம்.பி. என பலர் ர் சபை அமர்வில் பங்கேற்று தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

ஒவ்வொரு அமைச்சுக்களும் தனித்தனியாக எடுக்கப்பட்டு அவற்றில் கருத்துக்களை முன்வைக்க சபைக்கு வந்திருந்த எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு நேரம் வழங்கப்பட்டதால் நேற்றைய சபை அமர்வு வழக்கம் போலவே காலை 9.30 மணிமுதல் மாலை 5 மணிவரை இடம்பெற்றது.

வடக்கில் 3...

முன்பக்கத் தொடர்ச்சி...

அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் இணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், வடக்கில் முன்று நீவுகளில் முன்னெடுக்கவுள்ள சூரிய சக்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மூன்றாம் தரப்பின் பாதுகாப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு வடக்கில் மூன்று நீவுகள் தொடர்பான வேலைத்திட்டத்தை இடைநிறுத்துவதாக சீனத் தூதரகம் கூறியுள்ள நிலையில், அந்தத் திட்டங்களை இந்தியாவின் அதானிநிறுவனத்திற்கு வழங்கூடவடடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும், உரகப்பல் தொடர்பான பிரச்சனையை தொடர்ந்து சீனாவுடனான உறவில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதா? என்றும் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார்.

இதன்போது பதிலளித்த அமைச்சரவை ரமேஷ் பத்திரன கூறுகையில்,

அந்தத் நிட்டத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்ட இடமாக பார்க்கப்படுகின்றது. அதேபோல் இந்த கூகள் வரைபடத்தில் பார்த்து கொஞ்சம் பச்சை வட்டமாக இருந்தால் அதுவும் ஒரு காட்டு பிரதேசமாக ஒதுக்கப்படுகின்றது .இவ்வாறான நடவடிக்கைகள் வடக்கு,கிழக்கில் மட்டுமே நடக்கின்றன. வடகிழக்கில் வாழ்ப்பாணத்தில் குறைவாக இருந்தாலும் வன்னியில் பல இடங்களில் நடக்கின்றன.

83 காலகட்டத்தில் யுத்தம் காரணமாக பெரும்தொகையான மக்கள் இடம்பெயர்ந்து நாடு விட்டு சென்று அல்லது அந்த இடங்களில் குந்து வேறு பாதுகாப்பான இடங்களுக்கு சென்று விட்டு யுத்தம் முடிந்த பின்னர் அந்த இடங்களுக்கு மீண்டும் செல்லும் போது அவர்களை அங்கு விடாது தடுக்கப்படுகின்றார்கள். அத்துடன் இந்த இரண்டு நிணைக்கள்களுக்கும் இந்த மக்களின் காணிகளை கவிக்கிக்கும் நடவடிக்கைகளை எடுக்கின்றனர்.

காடு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இருக்கின்ற காடுகளை பாதுகாக்க வேண்டுமே தவிர காடுகள் இல்லாத இடங்களை காடுகளாக்கக்கூடாது. மக்கள் வாழ்ந்தத்தான சான்றுகள் உள்ள இடங்களும் காடுகளாக்கப்படுகின்றன. அந்த இடங்களில் தென்னை மரங்கள் கமுகு மரங்களை உள்ளன. அதுலே இடித்த தமிழ் பாடசாலைக் கட்டிடங்கள் கூட உள்ளன. இந்த இடங்கள் எல்லாம் காட்டுப்பிரதேசங்கள் என்று ஒதுக்கப்படுகின்றன. இது மிக வும் பாரதூரமான விடயம்.

பல ஆயிரக்கணக்கான மக்கள் இந்தியா வில் இருக்கின்றார்கள். அவர்கள் இரும்பி வருவதற்கு அவர்களிடம் காணிகள் இல்லை. ஏனென்றால் அவர்களின் காணிகளை கவிக்கிரித்து விட்டார்கள். அதேபோல் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களும் தமது காணிகளை மீண்டும் எடுக்க முடியாமல் உள்ளது. பற்றாக்கள் இருக்கும் இடங்களெல்லாம் காடுகள் எனக் கூறி அந்த இடங்களை எடுக்கப்படுகின்றன.

வடக்கு, கிழக்கின் குடி பரம்பலை இன்னும் மாற்று வதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.அந்த நிலங்கள் ஒருகாலத்தில் மாவட்டங்களுக்கு ,மாகாணங்களுக்கு வெளியே இருக்கக்கூடிய மக்களுக்கு பகிர்த்தளிக்கப்பட்டு விடுமா என்ற கேள்வி எழுத்த நிலையில் இன்று அவை பகிர்த்தளிக்கப்படுகின்றன. நெடுங் கேணியில் 3000 ஏக்கர் காணி இவ்வாறு பகிர்த் தளிக்கப்பட்டுள்ளது. அதேபோல் பல வர்த்தகர்களுக்கு ,அரசியல்வாதிகளுக்கு ,அரசஅதிகாரிகளுக்கு ஏக்கர்கணக்கான காணிகள் நீண்ட கால குத்தகைக்கு கொடுக்கப்படுகின்றன. இவை பின்னர் அவர்களுக்கே சொந்தமாகிவிடும் என்பது வேறு விடயம்.

இவ்வாறானநிலையில் வறிய மக்கள் தமது காணிகளை இழந்து செல்வதநிராதுள்ளனர். ஆகவே இதனை அமைச்சர் கட்டாயம் கவனத்தில் எடுக்க வேண்டும். சரியான முறையில் அந்த நிலங்கள் உரியவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். இப்போது காணிகளை உறுதிப்படுத்த காணி உறுதி கேட்கின்றார்கள். நிச்சயமாக உறுதிகள் இருக்காது. ஏனெனில் நீண்டகாலமாக மிக நீண்ட காலமாக வடக்கில் காணக்கச்சேரி நடத்தப்படவில்லை. மக்களிடம் உள்ள பொமிட்டுகளை அவர்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள் இல்லை. சிலர் அதனை தொலைத்து விட்டார்கள். இருந்தத்தான சான்றுகளை அவர்களால் செல்லக்கூடியதாகவுள்ளது.ஆனால் அதனைஅநிகாரிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே அமைச்சர் இதில் கவனம் செலுத்தி மக்கள் தமது சொத்துக் காணிகளுக்கு செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

ஐ.ம.ச.உறுப்பினர்கள்...

முன்பக்கத் தொடர்ச்சி...

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் இன்று புதன்கிழமை முதல் சபை அமர்வுகளில் கலந்துகொள்வதற்கு தீர்மானித்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி கடந்த நிலங்களில் அவர்கள் சபை அமர்வுகளை புறக்கணித்திருந்தனர்.

இதன்படி நேற்றுமுன்தினமும் மற்றும் நேற்றும் அவர்கள் சபைக்குள் வந்திருக்கவில்லை. இந்நிலையில் நேற்றைய தினம் பாராளுமன்ற துணைவாயிலுக்கு அருகில் அந்தக்கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தொடர்ந்து நேற்று பிற்பகல் சபாநாயகருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கும் இடையே விசேட கலந்துரையாட லொன்று இடம் பெற்றுள்ளது. இதன்போது இன்று முதல் பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள அவர்கள் தீர்மானித்துள்ளதாக கூறப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு அமைக்க மீதான வரவு செலவுத் நிட்ட விவாதத்தின் போது, மனுஷ நாணயக்காரவுக்கு மேலதிக நேரம் வழங்காமை தொடர்பில் சபையில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது. இதனை தொடர்ந்து சலிக்கிழமையும் சபையில் சர்ச்சை ஏற்பட்டிருந்த நிலையில், சபைக்குள் தமக்கு பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சபை அமர்வுகளை புறக்கணிக்கத் தீர்மானித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலுவை வலை...

முன்பக்கத் தொடர்ச்சி...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கடல் தொழில் அமைச்சு மீதான திருத்தங்கள், தெளிவு படுத்தல்களை முன் வைக்கும்போதே இவ்வாறு சவால் விடுத்த அவர் மேலும் கூறுகையில்,

இந்த சபையில் நான் இல்லாத நேரம் இரு எம்.பி.க்கள் எனது பெயரை இரு விடயங்களோடு சம்பந்தப்படுத்தியிருக்கின்றார்கள். அதில்முதலாவது கமந்திரன் எம்.பி.இரண்டாவது அஜுரகுமார நிசாநாயக்க. முதலாவது கமந்திரனின் அந்த பேச்சை ஹன்சாட்டிலிருந்து அகற்ற வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனில் அது முற்றிலும் பொய் யானது. அவர் வெளியில் ஒரு கதையையும் பாராளுமன்றத்தில் நந்து சிறப்புரிமையை பயன்படுத்தி பொய்யான குற்றச்சாட் டை அவர் முன்வைத்துள்ளார்.

அதாவது 2017 ஆம் ஆண்டிலும் 2018 ஆம் ஆண்டிலும் தங்களின் 'முண்டாட்சி' அதாவதுஹ் தங்கள் முண்டுகொடுத்து கொண்டுவந்த ஆட்சியில் தங்கள் 2 சட்டங்களை கொண்டுவந்ததாகவும் ஒன்று இழுவை வலை படகு தடைச்சட்டம், இரண்டாவது வெளிநாட்டு படகுகளின் நிருத்த சட்டம் .அவர்கள் இந்த சட்டங்களை சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடாமல் அத்த சட்டங்களை கொண்டு வந்ததால் குழு நிலை விவாதத்தில் அந்த சட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

அல்றைய நாராா நிறுவனத்திற்கு இந்த அமைச்சரவையால் இந்தசட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டாமென சொல்லியும் கிட்டத்தட்ட வடக்குமாகாணத்தில் 500க்கும் மேற்பட்ட இழுவை வலைப்படகுகள் இருக்கின்றன. அவர்களுக்கு தற்காலிகமாக பரிட்சார்த்த அடிப்படையில் ஒரு மாற்றுத்தொழில் கிடைக்கும் வரை அதனை அவர்களுக்கு அனுமதிக்குமாறு அன்று அவர்கள் அதனை நடைமுறைப்படுத்தியிருந்தார்கள். அந்த வகையில் நாங்கள் அதனை தொடருகின்றோம். அவ்வுதனை செயல் கொண்டிருக்கின்றோம். விரைவில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரவிருக்கின்றோம். அதுவரையில் அவர்கள் தற்காலிகமாக அந்த தொழிலை தொடர்ந்தும் செய்வார்கள்.

இந்நிலையில் இந்த 500 படகுகளிடமிருந்தும் நான் ஒரு இரவுக்கு ஒரு பட.டீ மிருந்து 5000 ரூபா கப்பமாக பெறுவதாகவும் அதனால் தான் அது அனுமதிக்கப் படுவதாகவும் கமந்திரன் எம்.பி. நந்து சிறப்புரிமையை பயன்படுத்தி இந்த சபையில் கூறியிருந்தார். இதற்கு அந்த கிராமத்து மக்கள் கமந்திரனுக்கு தகுந்த பாடத்தை படிப்பிக்கிருந்தார்கள். அந்தக்கிராமத்தில் ஹர்த்தால் நடத்தி கமந்திரனின் உருவ பொம்மையையும் எரித்து தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

பாராளுமன்றத்தில் எதனையும் வாந்தி எடுக்கலாமென நினைர் நினைக்கின்றனர். பொது வெளியில் நாளை அவர் இந்த கருத்தை ஊடகங்களுக்கு சொல்வாராக என நான் வெளிப்படையாக அவரிடம் கேட்கின்றேன். அப்படி சொல்வாரா இருந்தால் நான் நீதிமன்றத்தின் மூலம் அது தொடர்பான உண்மையை நிரூபிக்க முடியும் என்றார்.

வரவு-செலவு திட்ட...

முன்பக்கத் தொடர்ச்சி...

பிரதமரும் ஜ.தே .க. தலைவரும் எம்.பி.யுமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடிய பின்னர் ஒழுங்குப்பிரச்சினை முன்வைத் எழுப்பிய போதே இவ்வாறு தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் எம்.பி.யுமான ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறுகையில்,

இலங்கையின் வெளிநாட்டு சபை விருப்புகுறித்த தகவலை எமக்கு பெற்றுத்தருமாறு அண்மையில் சபையில் கோரினோம்.ஒரு சில நிமங்களில் தரவுகளை தருவதாக வாக்குறுதியளித்த போதும் இன்றுவரை எமக்கு தரவில்லை. ஆனால் இந்தியாவிற்கு கொடுத்துள்ளீர்கள். இந்தியாவிற்கு கூற முடியும் என்றால் ஏன் இந்த சபைக்கு கூற முடியாது? மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இணைய கலந்துரையாடல் ஒன்றில் இவ் விடயங்களை முன்வைத்துள்ளார். ஆகவே உண்மையான நிலைமையை நீங்கள் இந்த சபைக்கு கூற வேண்டும் என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, முன்னாள் பிரதமர் வலியுறுத்திய விடயத்துக்கு உரிய இதநிலில் பதில் வழங்வத தாக நான் கூறவில்லை. அதேபோல் இது குறித்து கேள்வியும் எழுப்பப்பட்டுள்ள காரணத்தினால் அதற்கான பதில் தயாராகி வருகின்றது. மேலும் வரவு செலவு நிட்டமுறுதியாவதற்கில் நிதி அமைச்சரினால் இது குறித்த முழுமையான விளக்க ம் முன்வைக்கப்படும் என்றார்.

இதன்போது மீண்டும் எழுந்த ரணில் விக்கிரமசிங்க, நாம் இது குறித்த கேள்வி எழுப்பிய வேளையில் சபைக்கு முன்வைப் பதாக இணக்கம் தெரிவித்தீர்கள். அதுமட்டுமல்ல இந்த காரணி குறித்து மீளாய்வு செய்ய வேண்டிய அவசியம் இல்லை, சகலும் தரப்படுத்தப்பட்டு சர்வதேச நாணய நிறுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 4ஆம் சுற்றுக்கு அமைவாக ஆலோசனை குழுவிற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. ஆகவே சர்வதேச நாணய நிறுவத்திற்கு கூற முடியும் என்றால், இந்திய அரசாங்கத்திற்கு கொடுக்க முடியும் என்றால், முன்னாள் ஆளுநருக்கு தெரிவிக்க நதுவர்றால் ஏன் சபைக்கு வழங்க முடியாது? நிதி நிதவாகம் சபைக்கே உள்ளது, நாம் காரணம் கேட்டும் அதனை சபைக்கு முன் வைக்கவில்லை என்றால் அது சிறப்புரிமை மீறல் செயற்பாடாகும். நிதி அமைச்சின் விவாதத்திற்கு முன்னர் இதனை சபைப்படுத்த வேண்டும். அதுமட்டுமல்ல நிதி அமைச்சர் சபையில் இருக்க வேண்டும், வரலாற்றில் முதல் தடவையாக நிதி அமைச்சர் இல்லாது வரவு செலவு நிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. சந்திரிக்கா குமாரதுங்க நிதி அமைச்சராக இருந்த காலத்திலும், மஹிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சராக இருந்த காலத்திலும் சபைக்கு வருவார்கள். ஆனால் இப்போது அவ்வாறு அல்ல. ஆகவே இதனை கருத்திலி கொள்ள வேண்டும் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட சபை முதல்வரான அமைச்சர் நிமெஷ் குணவர்தன , நிதி அமைச்சர் அவ்வப்போது சபைக்கு வருகின்றார். நேற்றும் (நேற்று முன்தினம்)சபையில் இருந்தார். அதேபோல் முக்கிய கூட்டங்கள் நடத்தும் வேளையிலும் பாராளுமன்ற அறையில் இருந்து நிதி அமைச்சர் கவனித்து வருகின்றார். நிதி அமைச்சர் வேலைப்பளு காரணமாக உள்ளதால் நாம் இதனை அவரிடம் கூறுகின்றோம் என்றார்.

இதன்போது மீண்டும் எழுந்த ரணில் ,நிதி அமைச்சர்கள் வரவு செலவு நிட்ட விவாதகாலத்தில் ஒருபோதும் இந்தியாவிற்கு செல்லவில்லை. ஆனால் இவர் வரவு செலவு நிட்ட காலத்திற்கும் இந்தியாவிற்கும் சென்றும் வந்துவிட்டார். நிதி அமைச்சர் வணக்கஸ்தலங்களை வணங்க சென்றாரா? நிதி அமைச்சர்சபையில் இருக்க வேண்டும், தயவு செய்து நிதி அமைச்சரின் இந்திய விஜயம் எதற்கு என்பதை சபையில் கூறுங்கள் என்றார்.

இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, உலகில் எந்தவொரு நாட்டுடனும் சர்வதேச உறவை முன்னெடுப் பதில் எந்த தடையும் இல்லை. உங்களின் ஆட்சிக்காலத்தில் அம்பாந்தோட்ட துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு கொடுத்து, அதில் பெற்றுக்கொண்ட 1200 மில்லியன்டொலர்களை தேடிய வெளிநாட்டு முதலீடு என காண்பித்தீர்கள். ஆனால் எமது நிதி அமைச்சர் தனது கடமையை சரியாக நிறைவேற்றியுள்ளார். நீங்களும் சபையில் இல்லாதமையே பிரச்சினையாக உள்ளது. நீங்களும் வரவு செலவு நிட்ட விவாதத்தில் முழுமையாக பங்குபற்றுங்கள் என்றார்.

இதற்கு பதிலளித்த ரணில் , வரவு செலவு நிட்டத்திற்கு நடுவில் நிதி அமைச்சர் ஏன் இந்தியாவிற்கு சென்றார் என்பதே எனது கேள்வி. வரவு செலவு நிட்டம் நல்லவிதன்றால், மத்திய வங்கி ஆளுநரின் வழிகாட்டல் இருக்கின்றது என்றால், 'ரோட் மப்' உள்ளதென்றால் அதில் நிதி அமைச்சர் இந்தியா செல்ல வேண்டும் எனக் கூறவில்லையே. யாரிடமும் மண்டியிட்டு பணம் பெற்றுக் கொள்ள மாட்டோம் என நேற்றும்(நேற்று முன்தினமும்)கூறியுள்ளார். அப்படியென்றால் இந்தியாவிற்கு சென்று நிதி அமைச்சர் என்ன செய்தார். புத்தகயாவை வழிபட சென்றாரா? அல்லது அரசுக்காக வேண்டிக் கொள்ள சென்றாரா? இதுவே எமது கேள்வியாகும். 'ரோட் மப்' கொள்கையின் பிரகாரம் சென்றால் ராஜபக்ஷவினின் கொள்கையில் பயணிக்க முடியாது, நிவாட் கப்ராலின் பாதையிலேயே செல்ல முடியும். அதனை அரசாக நீங்களே நிர்த்துக்கொள்ளுங்கள். யாருடைய பாதையில் பயணிக்கின்றீர்கள் என்பதை மட்டும் கூறுங்கள் என்றார்.

இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க,நாட்டில் சுயாதீனத்தை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளை நாம் செய்யப்போவதில்லை. அதேபோல் எமது வளங்களை விற்க எந்தவொரு நாட்டிடமும் மண்டியிடவும் நாம் தயாரில்லை. நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் என்ன நடந்தது என்பது தெரியும். இந்தியாவுடன் மட்டும் அல்ல, சீனா அமெரிக்கா மற்றும் சகல நாடுகளுடனும் இணைந்து எமது நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்போம். அதேபோல் நாம் ஜனாதிபதியின் பாதையில் மட்டுமே பயணிக்கின்றோம். எம்மிடம் பல தலைவர்கள் இல்லை என்றார்.

இதன்போது மீண்டும்எழுந்த ரணில் , நாடே பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றது. மக்களுக்கு இரண்டு தரப்புமீதும் வெறுப்பு ஏற்பட்டுள்ளது. எம் சகலரையுமே மக்கள் இட்டுள்ளனர். ந

செங்கடகல பினான்ஸ்
நம்பகத் தன்மைக்கு

நடைமுறையிலுள்ள சிறிய வட்டி வீதங்கள் (60 மாதங்களுக்கு மேல்)

காலம்	மாதாந்தம்	A.E.R.	முன்னாள் போனஸ்	A.E.R.
1 மாதம்			7%	7.23%
3 மாதங்கள்			7.75%	7.98%
6 மாதங்கள்			7.75%	7.9%
1 வருடம்	9.25%	9.65%	9.5%	9.5%
15 மாதங்கள்	9.25%	9.65%	9.5%	9.39%
18 மாதங்கள்	9.25%	9.65%	9.75%	9.53%
2 வருடங்கள்	9.5%	9.92%	10.5%	10%
3 வருடங்கள்	10.25%	10.75%	11%	9.97%
4 வருடங்கள்	10.25%	10.75%	11%	9.54%
5 வருடங்கள்	10.5%	11.02%	11.5%	9.51%

50 வருடங்களுக்கு மேலான இணைப்பு

செங்கடகல பினான்ஸ்
உங்கள் சேமிப்பிற்கு உயர் வட்டி வீதத்தையும் VISA டெபிட் கார்ட்டினையும் வழங்குகின்றது.
சேமிப்புகளுக்கு 4.5% வரை வருட வட்டி

நடைமுறையிலுள்ள பொதுவான வைப்பு வீதங்கள்

காலம்	மாதாந்தம்	A.E.R.	முன்னாள் போனஸ்	A.E.R.
1 மாதம்			7%	7.23%
3 மாதங்கள்			7.75%	7.98%
6 மாதங்கள்			7.75%	7.9%
1 வருடம்	8.75%	9.11%	9%	9%
15 மாதங்கள்	8.75%	9.11%	9%	8.9%
18 மாதங்கள்	8.75%	9.11%	9.25%	9.05%
2 வருடங்கள்	9%	9.38%	10%	9.54%
3 வருடங்கள்	9.75%	10.2%	10.5%	9.56%
4 வருடங்கள்	9.75%	10.2%	10.5%	9.16%
5 வருடங்கள்	10%	10.47%	11%	9.16%

விபரங்களை அறிய: காழர - 077 3 090 370 ஹற்றன் - 077 4 789 212 திரிகோணமலை - 076 3 770 932
மைல்காவி ஒருவருக்கு உயர்ந்தபட்சம் ரூ.1,100,000 என்ற நட்ட எட்டினையிற்கு. இலங்கை வைப்புக் காப்புறுதித்திட்டத்தினால் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது.
FITCH RATINGS SL BBB+(lka)
கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு 19.12.1995. 2011 ஆம் ஆண்டு 03 ஆம் திகதிக்கமைவாக சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் தரவைக் கணக்கியல் உரிமம் அளிக்கப்பட்டது. நிறுவனப் பதிவு இல. PB 238 PQ
பதிவுபெற்ற அலுவலகம்: இல.267, 2வது மாடி, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: (011) 2 301 301 தொலைநகல்: (011) 2 325 780 மின்னஞ்சல்: info@sernfin.com Web: www.sernfin.com

நானுஓயா தோட்டத்தில் அதிகாலையில் வீடு ஒன்றில் எரிவாயு அடுப்பு வெடித்தது

அக்கரப்பத்தனை திருபர்

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளரான்டன் மேற் பிரிவு தோட்டத்தில் நேற்று அதிகாலை 5 மணி அளவில் வீடு ஒன்றில் இருந்த எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

இதன்போது எவருக்கும் உயிர் ஆபத்துக்கள் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. எனினும் அடுப்பு முழுமையாகச் சேதமடைந்துள்ளது. அத்தோடு சிலிண்டர் ஊடாகவும் எரிவாயு கசிவு ஏற்பட்டுள்ளது.

கேஸ் தொடர்பாக பிரச்சினைகள் ஏற்படும்போது வாடிக்கையாளர்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்காக கேஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட 1311 என்ற அவசர இலக்கத்தை வீட்டின் உரிமையாளர் சுமார் மூன்று நிமிடம் தொடர்பு ஏற்படுத்த முயற்சித்த போதிலும் சம்பந்தப்பட்ட கேஸ் உரிமையாளர்களிடம் இருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. இதன் காரணமாக வாடிக்கையாளர்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர்.

இதுதொடர்பான விசாரணையை நானுஓயா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இளம் யுவதியை கடத்திச் சென்ற டிப்பர் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழப்பு

யுவதி உட்பட இருவர் படுகாயம்; கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சியில் இளம் யுவதி ஒருவரை கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்படும் டிப்பர் வாகனம் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

வட்டக்கச்சி - புதுப்பாலம் பகுதியில் அதி வேகமாக வந்த டிப்பர் வாய்க்கால் ஒன்றுக்குள் கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துடன் அந்த இளம் யுவதி உட்பட இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதேவேளை அந்த டிப்பர் வாகனத்தினை சிலர் மோட்டார் சைக்கிள்களில் துரத்திச் சென்றதாகவும் இதன்போதே டிப்பர் வாகனச் சாரதி அதி வேகமாக வாகனத்தைச் செலுத்தியதால் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வாகனம் விபத்துக்குள்ளானதாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் டிலக்சன் என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வாகனத்தில் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் 23 வயதுடைய இளம் யுவதி படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இது குறித்து கரவெட்டித்திடல் பகுதியைச் சேர்ந்த அந்த குடும்பத்தார் எனத் தெரிவிக்கும் ஒருவர் தெரிவிக்கையில்,

தங்கள் வீட்டு யுவதியை சிலர் டிப்பர் வாகனத்தில் கடத்திச் சென்றதாகவும் அவர்களை தாங்கள் விரட்டிச் சென்றதாகவும் தப்பிக்க முற்பட்டபடி டிப்பர் வாகனமே விபத்துக்குள்ளதானதாகவும் தெரிவித்தார்.

கடந்த வார திடீர் மின்தடையில் நாசகார செயற்பாடுகள் இருந்ததா?

விசாரணைகள் நடப்பதாக கூறுகிறார் அமைச்சர் ரமேஷ் பத்திரண

ந.ஜெயகாந்தன்

நாட்டில் கடந்த வாரத்தில் இடம்பெற்ற திடீர் மின்தடையின் பின்னால் நாசகார செயற்பாடுகள் இருந்ததா? என்பது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக அமைச்சரவை இணை பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர், கடந்த வாரத்தில் நாட்டில் ஏற்பட்ட மின்தடை தொடர்பில் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதன்போது அமைச்சர் கூறுகையில்,

மின்தடை தொடர்பாக தற்போது விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன்பின்னால் யாரேனும் நாசக் காரர்கள் செயற்பட்டுள்ளனரா என்பது தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளன. இது தொடர்பான விசாரணைகளின் தகவல்கள் வெளியானது அந்த விடயம் தொடர்பில் கூறமுடியும் என்றார்.

ஏன்றிணைக்கப்பட்ட சுகாதார சேவை சங்கத்தின் செயலாளர் டெல்பீடிய சுகதானந்த ஹிமியை விடுதலை செய்யக் கோரியும் சுகாதார சேவையாளர்களின் ஏனைய பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு பெற்றுதரும்படியும் கோரியும் சுகாதார சேவையாளர்கள் நேற்று செவ்வாய்கிழமை பகல் 12 மணி முதல் 1 மணி வரை நுவரெலியா பொது வைத்தியசாலை முற்றத்தில் அடையாள பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

படம்: தலவாக்கலை திருபர்

வவுனியா வடக்கு பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் மீண்டும் தோல்வி

சபையை இழக்குமா கூட்டமைப்பு?

வவுனியா திருபர்

தமிழ் தேசிய கூட்டமைப்பின் வசமுள்ள வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு 9 மேலதிக வாக்குளால் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சதணிகாசலம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

கடந்தமாதம் இடம்பெற்ற அமர்வில் சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு முன்வைக்கப்பட்ட நிலையில் அது வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு தோற்கடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் அது மீளவும் முன்வைக்கப்பட்டது.

இதன் போது மக்கள் சார்பான வேலைத்திட்டத்திற்கு போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லை என பல்வேறு உறுப்பினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

குறிப்பாக இந்த வரவு செலவுத் திட்டத்தினை தோற்கடிக்கவேண்டும் என தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வி.சஞ்சுதன், கருத்து தெரிவித்தார். அவரது கருத்தினை தமிழர்விடுதலைக்கூட்டணியின் உறுப்பினர் முகுந்தன் வழிமொழிந்தார்.

அனைக உறுப்பினர்களின் எதிர்ப்பினால் வரவு செலவு திட்டம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. பாதீட்டுக்கு எதிராக தமிழர் விடுதலை கூட்டணி, பொதுஜனபெரமுன, ஐக்கியதேசிய கட்சி,சுதந்திரக்கட்சி தமிழ் தேசியமக்கள் முன்னணி,சுயேச்சை குழு ஆகியவற்றை சேர்ந்த 17 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

பாதீட்டுக்கு ஆதரவாக தமிழ் கூட்டமைப்பை சேர்ந்த 8 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினரும் வாக்களித்திருந்தனர். இதனால் 9 மேலதிக வாக்குகளால் 2022 ஆம் ஆண்டிற்கான சபையின் பாதீடு இரண்டாவது முறையாகவும் பெரும்பான்மை வாக்குகளை பெற்று தோல்வியடைந்தது.

இந்நிலையில் உள்ளூராட்சி சட்டங்களின் படி பிரதேச சபைக்கு புதிய தவிசாளரை தெரிவுசெய்வதற்கான தேர்தல் விரைவில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழில் கரையொதுங்கும் சடலங்கள் பின்னணியில் உள்ள மர்மம் என்ன?

காணாமல் போனவர்களின் உறவுகள் மத்தியில் கவலை

யாழ். மாவட்ட கடற்கரைகளில் ஒரு வாரத்தில் அடுத்தடுத்து 6 சடலங்கள் கரையொதுங்கிய நிலையில் இவ்விடயம் தொடர்பான மர்மம் நீடிக்கிறது. இந்நிலையில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் மத்தியில் இது அச்சத்தை தோற்றுவித்துள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமசந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

யாழ் மாவட்ட கரையோரங்களில் கடந்த வாரம் ஆறு சடலங்கள் அடுத்தடுத்து கரையொதுங்கின. இச்சடலங்கள் தொடர்பில் எந்த விதமான தகவல்களும் வெளிவரவில்லை. காணாமல் போனவர்கள்

பற்றிய தகவல்கள் வெளிவராத நிலையில் இந்த சடலங்கள் கரை ஒதுங்குகின்றமை சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

கடற்கரைகளில் சடலங்கள் ஒதுங்கிவருகின்றன எவரில் கடலில் விபத்துக்கள் நடைபெற்று இருக்க வேண்டும். ஒன்றில் இலங்கை மீனவர்கள், அல்லது இந்திய மீனவர்களினது மீன் பிடி படகுகள் விபத்துக்குஉள்ளாகி இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு விபத்துக்கள் நடைபெற்றதாக தகவல் இல்லை.

இதனால் காணாமல் போனவர்களின் உறவுகள் அச்சத்தில் உள்ளனர். ஆனால் அரசாங்கம் இது குறித்து எந்த விசாரணைகளையும் முன்னெடுக்கவில்லை. மக்களுக்கு விபரங்களை விளைந்து கொடுக்க வேண்டும். பொலிஸ் , கடற்படை மீது அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே பொலிஸார் மற்றும் கடற்படை ஆகியவை இந்த சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நிதிரப்படுத்தி இதன் பின்னணியில் உள்ள விபரங்களை விரைவாக வெளிப்படுத்த வேண்டும் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரினார்.

பாகிஸ்தானில் கொலை செய்யப்பட்ட

பிரியந்தவின் குடும்பத்தினருக்கு 25 லட்சம் ரூபா இழப்பீடு

ந.ஜெயகாந்தன்

பாகிஸ்தான் சியல்கொட் பிரதேசத்தில் கொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் குடும்பத்தினருக்கு 2.5 மில்லியன் ரூபா(25 லட்சம்) இழப்பீட்டை வழங்குவதற்கு அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சியல்கொட் பிரதேசத்தில் தொழிற்சாலையொன்றில் முகாமையாளராக பணியாற்றி வந்த பிரியந்த குமார கடந்த 3 ஆம் திகதி கும்பலொன்றால் மனிதநேயமற்ற வகையில் கொலை செய்யப்பட்டார்.

புலம்பெயர் பணியாளராக 11 வருடங்களுக்கு மேலாக அவர் இலங்கைப் பொருளாதாரத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பைக் கருத்தில் கொண்டு, அவருடைய இழப்பால் ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மனைவி மற்றும் பிள்ளைகளின் நலன் கருதி மனிதநேய அடிப்படையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக ஊழியர் தலைமைப்பதவி நியமத்தின் மூலம் 2.5 மில்லியன்களை வழங்குவதற்காக தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாவலப்பிட்டி வெலிங்டன்பொலை பகுதியில் மகாவலி கங்கைக்கு குறுக்காக நீர்மாணிக்கப்பட்டிருந்த கம்பிப் பாலம் உடைந்து வீழ்ந்துள்ள நிலையில் அதனை புனர்நிர்மாணம் செய்து தருமாறு கோரி நேற்று பிரதேசவாசிகள் சிலோக ஸ்ட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை இங்கு காணலாம்.

படம் : கம்பளை திருபர்

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice In Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்.
இல:185, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு - 14.
தொலைபேசி இலக்கம்: 011 7322760, 011 7322761, 011 7322797
daily@thinakkural.lk, chiefeditor@thinakkural.lk
Circulation - 011 7322776 Email : cm@thinakkural.lk
Advertising - 011 7322775 Email : advt@thinakkural.lk
புதன்கிழமை 08 டிசம்பர் 2021 Wednesday 08th December 2021

கவனத்தில் எடுக்க அவசியமான ஐ.நா. விசேட அறிக்கையாளரின் பரிந்துரைகள்

ஆண்டான் -அமுமை கட்டமைப்பு வேறாக்கப்பட்டு விட்டதாக பெருமையாக கூறப்படுகின்றபோதிலும் ஏதோவொரு வடிவத்தில் அமுமையாக நடத்தப்படுத்தல் தொடர்ந்துகொண்டுதானிருக்கிறது. இலங்கையில் பிள்ளைகள் , பெண்கள், இன சிறுபான்மையினர் , முதியவர்கள் போன்ற பாதிக்கப்பக்கூடிய குழுக்கள் மத்தியில் சமகால அடிமைத்தனம் இருப்பதாக கடந்தவாரம் இலங்கைக்கு வருகைதந்திருந்த தற்கால அடிமை முறைகள் பற்றிய ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் டொமோயோ ஒபோகாட்டா கூறியிருப்பதை அவதானிக்க முடிகிறது.அதேசமயம் அந்த ஆண்டு செப்டெம்பரில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதாக நம்புவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். இலங்கையில் உள்ள சிறார்களில் சுமார் 1x மானோர் சில வகையான சிறுவர் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பெண்கள், சிறுபிள்ளைகள் வீட்டு வேலை விருந்தோம்பல், துப்புரவு செய்யும் வேலையிலும் ஏனையவர்கள் சற்றுவாத் துறையில் பாலியல் ரீதியாக சுரண்டப்படுகிறார்களெனவும் ஒபோகாட்டா குறிப்பிட்டுள்ளார் .தேயிலை மற்றும் இறப்பர் தோட்டப் பகுதிகள் போன்ற தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் சிறுவர் தொழிலாளர்கள் அதிகளவில் உள்ளதாகவும் அங்கு பிள்ளைகள் பாடசாலையை விட்டு வெளியேறி தமது குடும்பத்தை ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதாகவும் அவர் கட்டிக்காட்டியுள்ளார்.

சமகால அடிமைத்தன வடிவங்களில் பாரம்பரிய அடிமைத்தனம், கட்டாய வேலை , கடன் அடிமைத்தனம், வேலை சம்பிரதாயங்கள் பிள்ளைகள் அடிமை போன்று நடத்தப்படும் நிலைமைகள், வீட்டு அடிமைத்தனம், பாலியல் அடிமைத்தனம் போன்றவை பற்றி மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவலகம் கூறுகிறது.அதேவேளை இலங்கையில் சமகால அடிமை முறைகள் இனப் பரிமாணத்தைக் கொண்டிருப்பதை தான் பார்த்துள்ளதாக ஒபோகாட்டா கூறியிருக்கிறார். 'குறிப்பாக, 200 ஆண்டுகளுக்கு முன்னர் பெருந்தோட்டத் துறையில் பணியாற்றுவதற்காக இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட மலையகத் தமிழ் மக்கள் அவர்களின் பூர்வீக அடிப்படையில் பல்வேறு வகையான பாகுபாடுகளை தொடர்ந்து எதிர்கொள்கின்றனரெனவும் பெருந்தோட்டத் தமிழர்களுக்கு சொந்தமாக நிலம் இல்லாததால், காலனித்துவ காலத்தில் கட்டப்பட்ட லயன் வீடுகளில் வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதெனவும் குறிப்பிட்டுள்ள அவர், அவர்கள் வாழும் விதத்தைவிடு தான் மிகவும் வருத்தப்பட்டதாகவும் ஐந்து முதல் 10 பேர் வரை சிறிய இடங்களில் அடைபட்ட நிலையிலுள்ளனரென்றும் முறையான சமையலறை அல்லது கழிப்பறை அல்லது குளியலறை வசதிகள் இல்லையெனவும் மோசமான நிலைமை காணப்படுவதாகவும் குறிப்பிட்டிருப்பதுடன், இது தொடர்பாக ஏதாவது செய்யுமாறு அரசாங்கத்திற்கு தான் பரிந்துரைத்துள்ளதாகவும்' ஒபோகாட்டா கூறியுள்ளார்.

அதேவேளை நாட்டில் தற்கால அடிமைத்தனத்தை தடுத்து நிறுத்துவது தொடர்பாக அரசாங்கத்திற்கு அவர் பரிந்துரைத்திருக்கும் பல விடயங்கள் ஆக்கபூர்வமானவையாகத் தென்படுகின்றன. முத்தரப்பு சுயாதீன பொறிமுறையின் மூலம், தற்போது நடைமுறையில் உள்ள தேசியமட்டத்திலான குறைந்தபட்ச ஊதியத்தின் சரியான தன்மையை மதிப்பீடு செய்யுமாறும் பணவீக்கம் மற்றும் உயரும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப தேவையான மாற்றங்களைச் செய்யுமாறும் முறைசாரா பொருளாதாரத்தில் இருக்கும் வீட்டு வேலை மற்றும் ஏனைய துறைகளை தொழிலாளர் சட்டத்தில் சேர்த்து முறைப்படுத்துமாறும் 2025க்குள் சிறுவர் தொழிலாளர்களின் மோசமான வடிவங்களுக்கு முடிவு கட்டுமாறும் பிள்ளைகள் பாடசாலைகளில் கல்வி கற்பதையும் ,பாரப்பட்சம் இல்லாமல் அனைவரும் தரமான கல்வியை சமமாகப் பெறுவதையும் உறுதிசெய்யுமாறும் அவர் பரிந்துரைத்துள்ளார் . மேலும் பெண்கள், பிள்ளைகள் இன சிறுபான்மையினர் உட்பட அனைவரும் அனுதக்கியதாக அடிமைத்தனத்திற் சமகால வடிவங்கள் உட்பட மனித உரிமை மீறல்களுக்கான தற்போதைய முறைப்பாடு தெரிவிக்கும் முறைமைகளை வலுப்படுத்துமாறும் நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக முறையானதும் சுதந்திரமானதுமான விசாரணையை நடத்துமாறும் நியாயப்படுத்தப்படாத மற்றும் அதிகப்படியான கடன்களை தள்ளுபடி செய்து, வட்டி எல்லைகள் உட்பட வலிந்தின் மீது பயனுள்ள கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பை அறிமுகப்படுத்துமாறும் சேமிப்பு மற்றும் கடன் [சிக்கன] சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள், கிராமிய அபிவிருத்தி வங்கிகள் மூலம் கடன் பெறுவதை உறுதி செய்யுமாறும் போதுமான வளங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம் தொழிலாளர் பரிசோதகர்களை வலுப்படுத்துமாறும் தொழிலாளர்களை சுரண்டும் குற்றவாளிகளை பொறுப்புக்கூறலுக்கு வழிவகுக்கும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்கள், சிவில் சமூக அமைப்புகள் ,தொழிற்சங்கங்கள் மத்தியில் அச்சத்தற்கான கலாசாரத்தை உருவாக்கியுள்ள தொழிலாளர் படையின் இராணுவமயமாக்கலுக்கு தீர்வு காணுமாறும் பாலியல் தொழிலாளர்கள் சுரண்டப்படும் அபாயம் அதிகரிப்பதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் நாடுகடத்த நிறுவனங்கள் உட்பட இலங்கையில் இயங்கும் அனைத்து வணிகங்களும் வர்த்தகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா. வழிகாட்டல் கோட்பாடுகளை மதிக்கின்றன என்பதை உறுதிப்படுத்துமாறும் அனைத்து தொழிலாளர்களின், குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துமாறும் ஒபோகாட்டா பரிந்துரைத்திருக்கிறார் .இலங்கையில் தற்கால அடிமைத்தனத்தின் முக்கிய காரணங்களில் ஒன்றான இன மற்றும் சாதி அடிப்படையிலான பாகுபாட்டை நிவர்த்தி செய்யுமாறும் சிவில்சமூக அமைப்புகள்,தொழிற்சங்கங்கள்,தொழிலாளர்கள் அரசாங்கத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாடவும் ஒன்றுபட்டு தீர்மானங்களை எடுக்கவும் சம்பந்தப்பட்ட தரப்பினரை உள்ளடக்கிய அமைப்பை நிறுவுமாறும் யோகன் தெரிவித்திருக்கும் ஐ. நா. வின் விசேட அறிக்கையாளர் அனைத்து தொழிலாளர்களையும் கட்டாய உழைப்பு மற்றும் ஏனைய நவீன அடிமைத்தனத்திலிருந்து பாதுகாக்க சட்டங்கள் மட்டும் போதாது என்பதை வலியுறுத்த விரும்புவதாகவும் இலற்பெ செயற்பாட்டின் மூலம் வலுப்படுத்தப்படவேண்டும் ,அரசியல் விருப்பத்தால் ஆதரிக்கப்பட வேண்டுமெனவும் பயனுள்ளவையாக இருக்க தேவையான பொருள் மற்றும் மனித வளங்களுடன் மேம்படுத்தப்பட வேண்டுமெனவும் கூறியுள்ளார்.அனைவரும் கௌரவமான தொழிலைப் பெறுவதற்கும் சமமாக அடிமைத்தனத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் சகலரையும் உள்ளீர்த்த சமூதாயத்தை உருவாக்குவதும் அவசியமென்று தான் நம்புவதாக அறிக்கையாளர் தெரிவித்திருக்கும் பரிந்துரைகள் இலங்கையை போன்ற பன்மைத்தன்மை வாய்ந்த சமூகங்கள் வாழும் நாட்டுக்கு அதிகளவுக்கு நன்மையளிக்கும்.

அரசியல் வனாந்தரத்திலிருந்து வெளிவருவதற்கு தமிழ்க் கூட்டமைப்பு 'மக்களிடம்' திரும்ப வேண்டும்

குசல் பெரேரா

ஒருவர் விரும்பாதபோதும், காரணங்களுக்காக இணங்கிக்கொள்ளாத போதும் முதல் பக்கத்தை பிடித்துக்கொள்கிறார். கனடாவின் ரொறன்ரோ வில் நவம்பர் 20 சனிக்கிழமையன்று இடம்பெற்ற பொதுக் கூட்டத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் துரதிர்ஷ்டவசமான அனுபவத்தை கொண்டிருந்தார் . புலிகளின் ஆதரவுக் குழுவென குற்றம்சாட்டப்பட்டவர்களினால் இடையூறு விளைவிக்கப்பட்டது.எமது பாராளுமன்றத்தில் சுமந்திரன் மீது 'புலிகள்'என்று சிங்கள பௌத்த பெரும்பான்மையின ரால் கூச்சலிடப்படுவதுண்டு. இம்முறை தொலைதூரத்தில் கனடாவில் 'புலிகள் ' ஆல் கூச்சலிடப்பட்டு அவமதிக்கப்பட்டது.

இங்கு கவனம் செலுத்துவது அந்த வகுப்புவாத அடாவடித்தனம் ஒருவர் கண்டிக்கவும், குறை கூறவும் தயங்காத அந்த வகுப்புவாத அடாவடித்தனம் பற்றியதல்ல . போருக்குப் பின்னரான இலங்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமைக்கொழும்பின் வசதிக்காக எவ்வாறு உயருக்கு அரசியலை விளையாடுவதற்காக'வேர் கற்றை'யுடன் இடமாற்றம் செய்யப்பட்டது. மற்றும் எந்தவொரு நாடும் மக்களும் இதுவரை பெற்றிராத அனுதாபம் மற்றும் ஆதரவுக்காக பரப்புரை செய்யும் மேற்குலக வல்லரசு குழுக்களை அவர்கள் எவ்வாறு கட்டுப்படுத்தினர் மற்றும் சாந்து இருந்தனர் என்பது பற்றியதாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பையும் அதன் அரசியலையும் முழுமையாகக் கட்டுப்படுத்தும் 'சமஷ்டிக் கட்சி ' என்று அழைக்கப்படும் இலங்கைத் தமிழ் அரசு கட்சியுடன் கதை தொடங்குகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் புளொட் மற்றும் ரெலோ இன்னும் எஞ்சியிருப்பது சிங்கள அரசியலில் 'வாசகன், நிசல்கள் மற்றும் டிழுக்கள்' போன்ற அரசியல் நிர்ணயிப்புகளாகும். மூத்த அரசியல்வாதியான ஆர்.சம்பந்தன் தலைமையில், 2009 மே மாதம் போர் இறுதியை நீதியாக முடிவடைந்த பின்னர், அவர்கள் தீவிர அரசியலுக்கு வந்தபோது,தமிழரசுக் கட்சி தலைமைத் துவ நெருக்கடியில் இருந்தது. சம்பந்தனுக்கு அவருக்குப் பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை கைப்பற்றுவதற்கு நிச்சயமாக ஒரு 'முடிக்குரிய இளவரசர்' தேவைப்பட்டார்.

செல்வநாயகம் அவரின் அரசியல் விவரணத்தை அவரே வர்ணித்திருந்ததன் பிரகாரம் 'மதத்தால் ஹிறிஸ்தவர் மற்றும் கலாசாரத்தால் இந்து' என்ற தந்தை செல்வாவை பற்றிய அரசியல் புரிதல், மதியாபரணம் ஆறிதரம் சுமந்திரனிடம் சம்பந்தன் மிகவும் உறுதியான 'நவீன எஸ்.ஜே.வி.' யைக் கண்டிருக்கலாம். புதுக்கடை வட்டாரங்களிலும் உரிய மரியாதையைப் பெற்ற சுமந்திரன், இணுவிலை பூர்வீகமாகக் கொண்ட வேளாள மரபினராகவும் தென்னிந்திய திருச்சபையுடனான அவரது தொடர்புகள் மற்றும் ஒரு கிறிஸ்தவ மெதடிஸ்தத்தை கடைப்பிடிப்பதன் மூலம் தன்னை முன் கூட்டியே தகுதிப் படுத்திக்கொண்டார். 2010 தேர்தலின் பின்னர் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக சுமந்திரன் 2 வருடங்களில் தமிழரசுக் கட்சியின் இரண்டு உதவிச் செயலாளர்களில் ஒருவராக தன்னை நிலைநிறுத்திக்கொள்வதும் சம்பந்தனுக்கு அடுத்த வரிசையில் முன்னிறுத்தப்படுவதும் விரைவான வேலையாகும். அத்துடன் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராகவும் ஆனார்.

2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் சம்பந்தன் மற்றும் சுமந்திரனின் தமிழரசுக் கட்சித் தலைமையானது இ.தே.க.தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் தொடர்வதை உறுதிசெய்வதில் அர்ப்பணிப்புடன் இருந்ததுடன். 2015 ஆகஸ்ட் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னும் பின்னும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வெளிப்படையாக ஆதரித்தது. பிரதமர் விக்கிரமசிங்க மீதான அவர்களின் நம்பிக்கை மிகவும் கண்மூடித்தனமானது. சம்பந்தன் 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தனது தேர்தல் பிரசாரத்தின் போது தமிழ் மக்களுக்கு 2016 டிசம்பர் இறுதிக்குள் 'புதிய அரசியலமைப்பு'மூலம் முழுமையானதும் இறுதியானதுமான அரசியல் தீர்வு பற்றி உறுதியளித்தார்.

வடக்கு – கிழக்கில் 16 தமிழ் த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களைத் தெரிவுசெய்த தேர்தல் முடிவடைந்ததுடன், தலைமை கொழும்புக்குச் சென்றதுடன், ஏனைய பங்காளிகள் வெளியேறினாலும் கூட, நல்லாட்சி அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை உறுதிசெய்வதில் முழுமையாக தயார் நிலையில் இருந்தது. அவர்கள் புதிய அரசியலமைப்பு தொடர்பான வரக்குறிப்பினின் அடிப்படையில்இருந்தனர். சுமந்திரன் புதிய அரியலமைப்புச் சட்டத்தை உருவாக்க முடியும் என்பதில் உறுதியாக இருந்தார். ஒருங்கிணைந்த, பிரிக்கப்படாத மற்றும் பிரிக்க முடியாத நாட்டிற்கான அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தத்தில் இருந்தவை விட மிகவும் அதிகளவுக்கு பகிரப்பட்ட அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும். காணாமல் போனவர்கள், அன்றாட வாழ்க்கையில் இராணுவத் தலைமீடுகள், சிங்களக் குடியேற்றங்கள், இடப்பெயர்வுகள் மற்றும் காணியிப் பிரச்னைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து வடக்கு, கிழக்கில் பாரிய போராட்டங்கள் மற்றும் போராட்டங்கள் நடத்தப்பட்டு அரசாங்கத்தை தர்மசங்கடத்திற்கு தள்ளுவதை அவர்கள் விரும்பியிருக்கவில்லை.

2016 இன் ஆரம்பத்தில் வருகை தந்த ஜோப்பிய தூதுக்குழுவுடன் நான் நடத்திய கலந்துரையாடலில் 2016 இன் ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியின் நிந்தனை தெளிவாக வெளிப்பட்டது. 'நல்லாட்சி 'அரசாங்கத்தின் போது எந்த நேரத்திலும் புதிய அரசியலமைப்பு இருக்காது என்பது எனது கணிப்பு . அவர்கள் திகைத்துப்போய், என்ன புதிய அரசியலமைப்பு இல்லையா? என்று கேட்ட அவர்கள் , 'நேற்று நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவைையைச் சந்தித்தோம். ஆது அவர்களின் பங்காளிப் புடன் எழுதப்படுவதாகவும் இந்த ஆண்டு இறுதிக்குள் தயாராக இருப்பதாகவும் அவர்கள் எங்களிடம் தெரிவித்தனர்' என்று எனக்குக் கூறினர். உள்ளீடுகளை வழங்கும் அரசியலமைப்பு வரைவை பிரதமர் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் முன்வைப்பார் என்று தமிழரசுக் கட்சி நம்பியது. அரசியல் ரீதியாக அவர்கள் விரும்பியதும் உழைத்ததும் அதுதான்.

தென்னிலங்கை அரசியலைப் பற்றிய தமிழரசுக் கட்சியின் கணிப்பு முற்றிலும் கடினமானதாகவிருந்ததுடன் தெற்கில் உள்ள மிகவும் இனவாத சிங்கள அரசியல் கட்சியுடன் அவர்களை இழுக்கச்செய்துவிட்டது. 1948 இல் மலையகத் தமிழர்களின் உரிமைகளை நீக்கிய குடியுரிமை நீக்கம் செய்தல், பயங்கரவாதத் தடைச் சட்டம் அறிமுகம், 1979 ஐல் தமிழ் மக்கள் மீதான மிருகத்தனமான தாக்குதல்கள், 1981 ஜூன் மாதம் புகழ்பெற்ற யாழ். நூலகம் எரிப்பு மற்றும் 83 ஜூலை தமிழினப் படுகொலை போன்ற கொடூரமான இனவாத தலையீடுகளின் நீண்ட பட்டியலில் ஐ.தே.க. வினர் இன்றைய ராஜபக்ஷக்களின் அரசியலைவிட நிறந்த சிங்களபௌத்தர்களாக இருக்க போட்டியிடுகின்றனர். எனவே நான் ஜரோப்பிய பிரதிநிதிகளிடம் மிகவும் சாதாரணமாக, 'சரி, நீங்கள் மீண்டும் வருவீர்களானால் அடுத்த வருடம் அதைப் பற்றி பேசலாம்' என்று கூறி அவர்களிடம் விடைபெற்றேன்.

ஐ.தே.க.தலைமையின் மீது அதிக நம்பிக்கையுடனான கொழும்பை மையமாகக் கொண்ட தமிழரசுக்கட்சியின் அரியல், தெளிவான முன்னோக்கு இல்லாமலும் பொது மக்கள் பங்கேற்புக்கான நடைமுறை வேலைத்திட்டம் இல்லாமலும் பெரிய குழுக்களுக்கு வடக்கு – கிழக்கு போராட்டங்களில் இடம் கொடுத்தது.

அவர்கள் இந்த 2020 ஆகஸ்ட் தேர்தலில் தெளிவாகக் காணக்கூடிய வகையில் தமிழ் அரசியலை உடைத்துள்ளனர். 2015 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களில் வெற்றிபெற்றிருந்த நிலையில் 10 ஆகக் குறைக்கப்பட்டது. இதற்கு முன்னர் 516,000 க்கும் அதிகமான வாக்குகளில் இருந்து 327,000 வாக்குகளாக குறைவடைந்தன. நான்கு தமிழ் குழுக்களுக்குடையில் உடைவடைந்து ஆறு ஆசனங்களை இழந்தனர்.

துரதிஷ்டவசமாக, தமிழரசுக் கட்சியினர் அவர்களின் அரசியல் தோல்வியிலிருந்து எதையும் கற்றுக்கொள்ளவில்லை. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு அரசியலமைப்பின் வரைவு நகல் கூட கையில் இல்லாமல் மற்றும் தேர்தல் பிரசன்னம் மோசமாகக் குறைக்கப்பட்டது. எந்தவொரு குறுங்கால தொழிற்சங்க செயற்பாட்டாளர் கூறும் அடிப்படை அம்சங்களைக் கூட அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. உறுப்பினர்களின் வெளிப்படையான ஆதரவு இல்லாமல் எந்த பேரப் பேச்சும் வெற்றியடையாது. அரசியலில் தலைவர்கள் எதற்காகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதை வீதியில் இறங்கி வலியுறுத்த மக்கள் தேவைப்படுகிறார்கள். ஒரு அரசியல் கட்சியின் பலம் என்பது அது பாராளுமன்றத்தில் இருப்பது மட்டும் அல்ல, மாறாக அது வீதிகளில் இருக்கும் பலம்.

மக்களுடன் இணைந்து உணர்வுபூர்வமாக அரசியலுக்கு வருவதற்குப் பதிலாக, சுமந்திரன், இளம் பாராளுமன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கியனுடன் மேற்கத்திய சக்திகளின் ஆதரவை நாடி சுற்றுப்பயணம் மேற்கொண்டார். நவம்பர் 27 அன்று சுமந்திரன் ட்வீட் செய்ததாவது, 'அமெரிக்கா, கனடா மற்றும் பிரிட்டனில் தமிழ்க் கட்டமைப்பு நடத்திய சந்திப்புகள், கலந்துரையாடல்கள் மற்றும் பேச்சுக்கள் மிகவும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவை' என்று குறிப்பிட்டு, ஜனாதிபதி பைடனின் வீடு அமெரிக்கா மீண்டும் இ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு திரும்பியுள்ளது என்று மேலும் குறிப்பிட்டிருந்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா பிரவேசம் என சுமந்திரன் மகிழ்ச்சியுடன் ட்வீட் செய்திருப்பது பரிதாபத்திற்குரியது. அமெரிக்காவின் சிறப்பு என்ன? 2013 ஆம் ஆண்டிற்குள் 131 இ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்கள் மற்றும் 45 இ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை முடக்குவதற்கு அமெரிக்கா பொறுப்பேற்க வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் சிறப்பு. பாதுகாப்புச் சபையின் வீட்டோ அதிகாரத்துடன், இஸ்ரேல் – பாலஸ்தீன மோதலில் ஆக்கிரமிப்பு மற்றும் விரிவாக்கக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைத் தொடரணக்குவிக்கிறது (1983 இன் 36 /226 ஏ மற்றும் பி மற்றும் 1984 இன் ஏ /ஆர் .ஈ. எஸ். /39/146 தீர்மானங்களைச் சரிபார்க்கவும்).

2003 மார்ச்சில் அமெரிக்கா ரொனி பிளேயரின் பிரிட்டன் உட்பட கூட்டணி பங்காளிகளுடன் ஈராக் மீது படையெடுத்தமை , இ.நா. சாசனத்தை மீறிய 'சட்டவிரோதமானது' என்று அச்சமயம் இ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் பி.பி.சி. உலகசேவையிடம் கூறியிருந்தார்.

(07 ஆம் பக்கம் பார்க்க...)

தமிழ்க் கூட்டமைப்பை திட்டமிட்டு புறக்கணித்து சஜித் பிரேமதாச பெரும் அநீதி இழைத்துள்ளார்

சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.யும் அரச தரப்பும் சபையில் குற்றச்சாட்டு

வரவு- செலவுத் திட்டத்தில் அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்களின் பெயர்ப் பட்டியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை திட்டமிட்டு புறக்கணித்து எதிர்க்கட்சித் தலைவர் ஜனித் பிரேமதாச பெரும் அநீதி இழைத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரச தரப்பும் சபையில் குற்றம் சாட்டின.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய நிலையில் அமைச்சுக்கள் ,இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை விவாதங்களின்றி நிருத்தங்கள், தெளிவுபடுத்தல்களுடன் நிறைவேற்ற முற்பட்டபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மீது முன் வைத்த குற்றச்சாட்டையடுத்தே அரச தரப்பினரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு ஆதரவளித்துப் எதிர்க்கட்சித் தலைவரை கடுமையாக விமர்சித்தும் கருத்துக்களை முன்வைத்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. யான சார்ள்ஸ் நிர்மலநாதன் பிரதான எதிர்க்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு செய்த அநீதி தொடர்பில் சபாநாயகருக்கு முறையிடுகையில்,

வரவு- செலவுத் திட்டத்தில் அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்களின் பெயர்ப் பட்டியல் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தினால் சபாநாயகருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இந்த எம்.பி.க்கள் பெயர்ப் பட்டியலில் 33 எம்.பிக்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த பெயர்ப் பட்டியலில் இந்த பாராளுமன்றத்தில் 3 எம்.பி. க்களை மட்டும் கொண்ட தேச.வி.பி.யின் இரு எம்.பி.க்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால் 13 எம்.பி. க்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எந்தவொரு எம்.பி. யின் பெயரும் இந்தப் பட்டியலில் இல்லை.

எமது பிரதேசங்களிலும் பல பிரச்சினைகள் உள்ளன. நாம் அதனை இங்கு பேச வேண்டும். எமக்கு அமைச்சரவை அமைச்சர்களும் இல்லை. ஆகவே நாம் எமது பிரச்சினைகளை இங்கு பேசுவதற்கு நேரம் தேவை. எமக்கு நிட்டம்பிட்டிநியில் அநீதி இழைக்கப்படுகின்றது. விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் பெயர்ப் பட்டியலில் எமது பெயர் ஏன் உள்வாங்கப்படவில்லை? என சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பதிலளிக்கையில்,இப்பிரச்சினைக்கு இப்போது தீர்வு வழங்க முடியாது. அந்த பெயர்ப் பட்டியலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தான் தயாரித்துள்ளது என்றார்.

இதன்போது எழுந்த அரச தரப்பு எம்.பி. யான டிலான் பெரேரா, சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பும் விடயம் நியாயமானது. எதிர்க்கட்சித் தலைவர் மிகப் பெரும் அநீதி செய்துள்ளார். இந்த பாராளுமன்றத்தில் பல கட்சிகள் உள்ளன. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதானமானது. அவர்கள் ஒரு மக்கள் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்கள். இவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் செய்தது அநீதி. சகல நிலையிலுள்ள கட்டளைகளும் இந்த சபைக்கு கட்டுப்

பட்டது. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இழைக்கப்பட்ட அநீதி சரிசெய்யப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பேச அனுமதியில்லாதுவிட்டால் ஏன் இந்த விவாதம்? பாராளுமன்றம்? எனக் கேட்டார்.

இதனையடுத்து எழுந்த அரச தரப்பு எம்.பி. யான ராகவன், ஜன நாயகம் தொடர்பில் உலகம் பார்த்துக்கொண்டிருக்கையில் அதற்கு முரணாக பாராளுமன்றத்திலிருந்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வெளிநடப்புச் செய்துள்ளது. எனவே அந்த ஜனநாயகத்தை வன்னி மாவட்டத்திலிருந்து பாதுகாக்க முற்படும் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. க்கு உரிய நேரம் வழங்கப்பட வேண்டும் என்றார்.

இந்த விடயம் தொடர்பில் அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோர்ஸ்டன் பெர்னாண்டோ கூறுகையில், தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க் கட்சித் தலைவர் பெரும் அநீதி செய்துள்ளார். விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் எம்.பி.க்கள் பட்டியலில் சபையில் 3 பேர் உள்ள ஜே.வி.பி.க்கு 2 இடங்களைக் கொடுத்த அவர் 13 பேர் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு இடத்தைக் கூட வழங்கவில்லை. சஜித் பிரேமதாச ஜனநாயகத் தேர்தலில் போட்டியிட்டபோது வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அவருக்குத் தான் வாக்களித்தார்கள். ஆனால் சஜித் அந்த மக்களுக்கு எதிரகத் தான் இன்று செயற்படுகின்றார். எனவே சார்ள்ஸ் நிர்மலநாதனின் நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சுக்கள் மீதான விவாதங்கள் இல்லை என்பதனால் சார்ள்ஸ் நிர்மலநாதன் கேட்டதங்களை முன்வைக்க நேரம் வழங்கப்படும் என்றார்.

இதன்போது எழுந்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் எம்.பி.யும் அரச தரப்பு ஆதரவாளருமான டயானா கமகே, ஐக்கிய மக்கள் சக்தியின் உரிமையாளர் நான். எனக்கும் பேச நேரம் வேண்டும். மக்கள் வராதபோது பாராளுமன்றம் வந்தவர்கள் சிறு பிள்ளைகள் போல் செயற்படுகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி எனது கட்சி என்ற உரிமையில் எனக்கு பேச நேரம் ஒதுக்கப்பட வேண்டும் . பேசுவதற்கு எனக்கு உரிமையுண்டு என்றார்.

இதனையடுத்து எழுத்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியப்பட்டியல் எம்.பி. யான முஷாரப், எனது மாவட்டத்தில் வன ஜீவராசிகள் தொடர்பான பல பிரச்சினைகள் உள்ளதால் நானும் இந்த விவாதத்தில் பேச வேண்டும் என்றார்.

இவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, விவாதங்கள் இல்லை என்பதனால் உங்களுக்கு நிருத்தங்கள், தெளிவுபடுத்தல்களை வழங்க நேரம் தரப்படும் என்றார்.

புவிச் சரிதவியல் திணைக்களத்தின் முகாமையாளராக மட்டு. மாவட்டத்திலே 10 வருடங்களுக்கும் மேலாக

ஏன் கடமையாற்றுகின்றார்: கோவிந்தன் கருணாகரம் எம்.பி. கேள்வி

புவிச் சரிதவியல் திணைக்களத்தின் முகாமையாளராக மட்டக்களப்பு மாவட்டத்திலே 10 வருடங்களுக்கும் மேலாக ஒருவர் கடமையாற்றிக்கொண்டிருக்கின்றார் . 10 வருடங்களுக்கும் மேலாக இருக்கும் ஒருவரை அமைச்க ஏன் தொடர்ந்தும் வைத்திருக்கின்றது என்பது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்கிழமை கூற்றாடல் அமைச்சு தொடர்பில் கேள்வி ஒன்றை முன்வைத்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மணல் அகழ்வு என்பது இந்த நாட்டில் பாரிய கொள்ளை சம்பவமாகவே இடம்பெறுகின்றது. அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ஒருநாளைக்கு 500 க்கும் மேற்பட்ட லொறிகளில் மணல் மாவட்டத்தை விட்டு வெளியேறுவது மாத்திரமல்லாது ரயில் மூலமாகவும் மணல் மாவட்டத்தை விட்டு வெளியேறுகின்றது.

புவிச் சரிதவியல் திணைக்களத்தின் முகாமையாளராக மட்டக்களப்பு மாவட்டத்திலே 10 வருடங்களுக்கும் மேலாக ஒருவர் கடமையாற்றிக் கொண்டிருக்கின்

றார். அரச நிணைக்களங்களிலே உயர் அதிகாரிகள் கடமையாற்றும் போது 5 வருடங்களுக்கொருமுறை கழற்றி முறையில் அந்த அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுவது இந்த நாட்டின் வழமையாக இருக்கின்றது. இந்த புவிச் சரிதவியல் நிணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் சப்படி 10 வருடங்களுக்கும் மேலாக ஒரு மாவட்டத்திலே கடமையாற்றுகின்றார்? அரசியல் செல்வாக்குடன் அவர் கடமையாற்றுகின்றார் என்றால் அந்த அரசியல் செல்வாக்கை செலுத்துபவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 க்கும் மேற்பட்ட அனுமதிப்பத்திரங்களை வைத்திருக்கின்றனர்.

அந்தவகையில் புவிச் சரிதவியல் நிணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளராக 10 வருடங்களுக்கும் மேலாக இருக்கும் ஒருவரை நீங்கள் ஏன் தொடர்ந்தும் வைத்திருக்கின்றீர்கள் என்பது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் நான் ஏற்கனவே உங்களிடம் கூறிய போது நீங்கள் விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக கூறிவிருந்தீர்கள். ஆனால் இதுவரை இது தொடர்பில் அங்கு எந்தவித முன்னேற்றமான நடவடிக்கையும் இடம்பெறவில்லை. எனவே இது தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

இதற்கு கூற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர பதிலளிக்கையில், மணல் அகழ்வு வகை தொடர்பில் கருணாகரம் எம்.பி. இங்கு பலவிடயங்களைக் கூறினார். சில பிரதேசங்களில் சில அதிகாரிகள் முறைகேடுகளில் ஈடுபடுகின்றனர் என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். இவ்வாறான சிலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்திலும் எடுப்போம். எனவே இது தொடர்பில் கருணாகரம் எம்.பி. தன்னிடமுள்ள தகவல்களைத்தந்தால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

பா. கிருபாகரன் – ந. ஜெயகாந்தன்

ஆங் சான் சூகி இராணுவத்தினரால் சிறை வைக்கப்பட்டதால் மியன்மாரின் இராணுவ ஆதிக்கத்துக்கு மறைமுக எதிர்பையேனும் நாம் வெளிப்படுத்த வேண்டும்

ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து

மியன்மாரில் ஜனநாயக ரீதியில் தேர்தலில் வெற்றிபெற்ற ஆங் சான் சூகி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் இலங்கை அரசின் மௌனம் ஆரோக்கியமானதல்ல. நாமும் ஒரு பௌத்த நாடாக மியன்மாரின் இராணுவ ஆதிக்கத்துக்கு மறைமுக எதிர்ப்பையேனும் வெளிப்படுத்த வேண்டும் என முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமாகிய எம்.பி.யுமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை, ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய ரணில் விக்கிரமசிங்க கூறுகையில்,

மியன்மாரின் நிலைமை குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். ஆங் சான் சூகி மற்றும் அவரது தரப்பின்ரிலர் தற்போது சிறை வைக்கப்பட்டுள்ளனர் . தேர்தலில் அவருடைய கட்சியே வெற்றிபெற்றது. அவர்தான் அங்கு ஜனநாயகத்தை உருவாக்கினார். அவ்வாறான நிலையில் அவரது நிலையைப்பு குறித்து ஆயிய நாடுகள் அனைத்துமே செயற்பாட்டு ரீதியில் உள்ளன். ஆனால் நாம் அமைதியாக இருப்பது நல்லதல்ல.

ஆசிய நாடுகளின் கூட்டங்களுக்கு மியன்மார் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கவில்லை.

நாம் வெளிப்படையாக இதனை செய்ய வேண்டும் எனக் கூறவில்லை. ஆனால் மறைமுகமாகவேனும் எமது அவதானத்தை செலுத்த வேண்டும். நாமும் ஒரு பௌத்த நாடாக இதனை கருத்தில் கொள்ள வேண்டும். சபை முதல்வர் இதனை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்றார்.

இந்த விடயம் குறித்து அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறுகையில்,

ஆங் சான் சூகியின் கைது குறித்து நாம் சகலரும் அதிருப்தியை வெளிப்படுத்துகின்றோம். அந்நாட்டின் இராணுவ ஆட்சியில் அவர்களுக்கு எதிரான தவறுகளை செய்த காரணத்தினால் தான் ஆங் சான் சூகி கைது செய்யப்பட்டுள்ளதாக கூறுகின்றனர். இராணுவ ஆட்சிக்கு நாம் ஒருபோதும் இணக்கம் தெரிவிக்கமாட்டோம். ஆனால் அந்த நாட்டில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படவும் அதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் குறித்தும் எமக்கு தகவல் தெரியாது. அது குறித்தும் நாம் தேடிப்பார்க்கின்றோம்.

ஆனால் அவர்களில் நாட்டின் நீதிமன்றத்தில் ஒரு தண்டனை வழங்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு எதிராக எமது சபைகளில் எதிர்ப்பு தெரிவிக்க உரிமை இல்லை. அதனை ஏன் இந்த சபையில் கூறுகின்றீர்கள் என ரணிலிடம்

கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ரணில் ,ஆங் சான் சூகியின் கட்சி தேர்தலில் வெற்றிபெற்று அரசாங்கத்தை அமைக்கவிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மியன்மார் அரசாங்கத்தை இராணுவம் கைப்பற்றிக்கொண்டுள்ளது. அதேபோல் அவர்கள் நியமித்த இராணுவ நீதிமன்றத்தில் தான் இந்த தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. உலக நாடுகள் சகலரும் இதனை நிராகரிக்கின்றனர். அதுமட்டுமல்ல ஆசிய நாடுகள் மியன்மாரை நேரடியாக நிராகரித்துள்ளனர். நாம் தேரவாத பௌத்த நாடென பிரிக்கிறிப்பிடுத்த அவசியம் இல்லை. மறைமுகமாக நாம் இவற்றை வெளிப்படுத்த முடியும். அதனை கருத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

அரசியல்...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

படையெடுப்பு பற்றிய 2016 பிரிட்டிஷ் சில்கொட் விசாரணை இது தேவையற்றது என்றும் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய இரண்டும் ஐ.நா. பாதுகாப்புச் சபையை குறைமதிப்பிற்கு உட்படுத்தியதாகவும் கூறியது. வாஷிங்டனில், 9/11 பயங்கரவாதத் தாக்குதலை விசாரணை செய்த குழு , ஈராக் அல்–கொய்தாவுக்கு உதவுவதாகவும் பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதாகவும் அமெரிக்கா கூறுவது 'உளவுத்துறையால் நிராகரிக்கப்பட்ட மேலேவட்டமான தகவல்களின் அடிப்படையிலானது' என்று கூறியிருந்தது . படையெடுப்பின் முதல் மூன்று ஆண்டுகளில் 150,000 ஈராக்கிய பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

ஜனநாயகம் மற்றும் சமாதானத்துக்கு அமெரிக்கா பங்களிப்பு செய்வதைப் பற்றி எதுவும் பதிவு செய்யப்படாத நிலையில், பூகோள –அரியல் நீதியாகதங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அவர்கள் நம்பும் நாடுகளில் ஆட்சி மாற்றங்கள் மீதான வெளிப்படையான மற்றும் இரகசிய தலையீடுகளுக்கான குற்றச்சாட்டுகளின் சரத்தை அது கொண்டுள்ளது. அமெரிக்காவின் இரகசிய 'ஆட்சி மாற்றங்கள்' பற்றி பேசுகையில், 'அமெரிக்காவின் பரந்த ஆட்சிக் கலை இன்னும் சிக்கலாக உள்ளது. ஆட்சி மாற்றத்தை நாடுவது ஜனநாயகத்தை மேம்படுத்துதல், மனிதாபிமான உதவி மற்றும் மெயில்–சமூக ஆதரவு நிட்டங்கள் வெறும் மண் குதிரைகள் என்று தொடர்ச்சியான குற்றச்சாட்டுகளுக்கு வழிவகுத்தது (ஆட்சி மாற்ற வரித்தகத்திலிருந்து விலகி இருங்கள் – பெஞ்சமின் டெனிசன் / வாச் ஒன் நிரொக்ஸ் – 2020 ஜூன் 16). ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு அமெரிக்கா மீண்டும் வருவதைப் பற்றி பெருமைப்பட ஏதாவது இருக்கிறதா?

2015 ஜனவரி ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, 2015 அக்டோபரில் இணை அனுசரணையுடன் கூடிய ஐ. நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானம் 30/1 இல் அமெரிக்காவிற்கும் புதிய 'நல்லாட்சி' அரசாங்கத்திற்கும் இடையில் ஒரு பெரிய சமரசத்தை நாங்கள் கண்டோம். ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை அமெரிக்காவுடன் இணைந்து இணை அனுசரணை வழங்குவது தமிழரகக் கட்சியின் இணக்கத்துடன் புதிய அரசாங்கத்தால் ஒரு சாதனையாகக் கணிக்கப்பட்டது. ஆயினும்கூட கவனிக்கப்படாமலிருக்கணாமல் போனவர்களுக்கு நீதி வழங்கக் கோரி போராட்டம் நடத்திய, எதிர்ப்புத் தெரிவித்த தாய்மார்கள் மற்றும் மனைவிமார்களுக்கு அவை எதுவுமில்லையென்றே அர்த்தப்படுகிறது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட காணாமல் போனோர் அலுவலகம் வடக்கிழக்கு தமிழ்மக்களால் 'காணாமலாக்கப்பட்டவர்களை கவனிக்கப் படாமலிருக்கணாமல் போனவர்கள்' என்று உரைவிபெயர்க்கப்பட்டிருப்பதாக வடக்கிழக்கு தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டது. ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததுடன் காணாமல்போனோர் அலுவலகம் இப்போது என்ன மாதிரி? ராஜபக்ஷக்களுக்கு இது ஜெனீவாவில் நல்லதொரு சட்டபூர்வமான கவசமாகும் . விசாரணைகள் இன்றி காணாமல் போதலை கொடுத்து தீர்ப்பதற்குபாராளுமன்றத்தில் தமிழ்க் கூட்டமைப்பால் வாக்களிக்கப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தால் நிறுவப்பட்ட காணாமல்போனோர் அலுவலகத்தை அவர்கள் கொண்டுள்ளனர்.

வடக்கு–கிழக்கிலுள்ள மக்களுக்குப் பதிலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு /தமிழரகக் கட்சித் தலைமைத்துவம் எந்தேகத்திற்குரிய அமெரிக்காவிற்கும், செயற்பாட்டுத்திறனற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும் மாறுவது அவர்கள் தங்கள் சொந்த மக்களை விட 'வெளியார் கள்' மீது அதிக நம்பிக்கை வைத்திருப்பதை நிரூபிக்கிறது. ஒன்றுபட்ட முயற்சியால் மக்கள் மத்தியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பது இப்போது இலங்கை அரசியல்வாதி இராசமாணிக்கம் சாணக்கியனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவம் பெப்ரவரி தொடக்கத்தில் 'பி 2பி 'யில் கிழக்கிலிருந்து வடக்கிற்கு ஐந்து நாட்களும் பேரணியில் பங்கேற்றிருந்தார்.

முதன்முறையாக அமுரிக்கக்கண்க்கான தமிழ், முஸ்லிம் மக்களை அழைத்துச் சென்ற வரலாற்றுப் பயணத்தின் போது, 'இந்து' விடம் பிரதான ஏற்பாட்டாளர் களில் ஒருவரான எஸ்.பி.இளங்கோவன் விவேகத்துடன் பேசியிருந்தார். 'சகல தரப்பையும் உள்ளடக்கிய அரசியலின்' அவசியத்தைக் காணும் இளைஞர்களை சந்திப்பது உறுதியளிக்கிறது என்று 'நி இந்து' விடம் அவர் கூறியுள்ளார் . 'உண்மையில், அவர்கள் சிறுபான்மையினரான மட்டுமல்லாமல் முற்போக்கான சிங்கள மக்களுடனும் அடக்குமுறை, பிளவுபடுத்தும் சித்தாந்தங்களை எதிர்த்துப் போராடுவதற்கு வலுவான மற்றும் அர்த்தமுள்ள கூட்டணியை உருவாக்கக்கூடிய, உள்ளடக்கிய இடத்தில் பெரும்பான்மைத்தை காண்கிறார்கள்' என்று அவர் கூறியிருந்தார். அதற்கு கடுன உழைப்பும் நேரமும் தேவை என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். ஜனநாயகம் மற்றும் சமாதானத்திற்காக பாராங்குத்தனங்களில் சார்ந்திருக்காமல் இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு/தமிழரகக் கட்சி தலைமை எடுக்க வேண்டிய அரசியல்.

டெய்லி மிரர்

ஆக்ரோயா ஆற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

பல கோணங்களில் விசாரணை

பத்தனை நிருபர்

டயகம பொலிஸ் பிரிவுக் குட்பட்ட டயகம ஆக்ரோயா ஆற்றிலிருந்து பெண்ணின் சடலம் நிங்கள் மாலை மீட்கப் பட்டதாக டயகம பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப் பட்ட பெண் டயகம 5 ஆம் பிரிவைச் சேர்ந்த 53 வயது டைய சாமிநாதன் தங்கேஸ்வரி

என அடையாளம் காணப்பட் டுள்ளார். இந்த ஆற்றில் பெண் ஒருவரின் சடலம் மிதப்பதைக் கண்ட பிரதேச மக்கள் உடனடி யாக பொலிஸாருக்கு அறிவித் துள்ளனர். சம்பவ இடத்திற்கு விரைந்த டயகம பொலிஸார் சடலத்தை பார்வையிட்ட பின் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பெண் நீரில் அடித்துக் கொண்டு வந்து உயி ரிழந்தாரா அல்லது ஆற்றில் தவறி விழுந்து உயிரிழந்தாரா அல்லது எவராவது கொலை செய்து ஆற்றில் வீசினார்களா என்பது தொடர்பாக பலகோ ணங்களில் பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்துள்ள னர்.

மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோத னைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணை களை டயகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மில்லவான கிராமத்திற்குச் செல்ல பாலம் இல்லை: மக்கள் விசனம்

தம்புள்ள நிருபர்

கலேவெல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மாதிப்பொளை - பால கொல்ல ஆற்றுக்கு குறுக்காக பல்லேப் பொல மில்லவான கிராமத்திற்குச் செல் வதற்கு பாலமொன்று இன்மையால் தாம் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொ டுத்து வருவதாக பாலகொல்ல - கெத்தன் கமுவ மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆற்றின் குறுக்காக பாலமொன்று இன் மையால் மழைக் காலங்களில் பாடசா லைக்குச் செல்ல மாணவர்கள் மிகுந்த சி ரமத்திற்குள்ளாகி வருகின்றனர். திடீரென எவரும் நோயுற்ற நேரங்களில் தாம் செய் வதறியாது தவிக்க நேர்வதாகவும் அவர் கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இவ் ஆற்றில் நீர் மட்டம் உயர்வடைந்தி ருந்த நிலையில் காய்ச்சலால் பாதிக்கப்பட் டிருந்த சிறுவன் ஒருவரை உரிய நேரத்தில் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல முடியாது போனதாகவும் இதன் காரண மாக அச்சிறுவன் உயிரிழக்க நேரிட்டதா கவும் கிராமவாசிகள் கட்டிக்காட்டினர்.

ஒளுவில் அல்-ஹறாறா மகா வித்தியாலய (தேசிய பாடசாலையின்) உப்றக்லிவ் ஆசிரியர் ஆர்.றொஷான்த் தனது வியாபார ஸ்தலமான வை.டி.அலுமினியம் பிட்டங்களில் நன்கு வடிவமைக்கப்பட்ட முதலுதவிப் பெட்டி ஒன்றை பாடசாலைக்கு அன்பளிப்பாக பாடசாலை அதிபர் அஸ்ஷெய்க் யு.கே.அப்துர் ரஹீமிடம் வழங்குவதையும் பிரதி அதிபர் எம்.ஏ.கமறுந்நிஸா, உதவி அதிபர் எம்.எச்.மஹ்மூத் நவிம் ஆகியோ ரையும் இங்கு காணலாம்.

படம் : மாளிகைக்காடு நிருபர்

வீடமைப்பு உதவி,வீடமைப்புக் கடன் ஆகியவற்றுக்கான காசோலைகள் வழங்கல்

உங்களுக்கு வீடு - நாட்டிற்கு எதிர் காலம் தேசிய வீடமைப்புத் திட்டத் தின் கீழ் கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரி வில் ரண்பொகுணகமவில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார ச பையினால் வீடமைப்பு உதவி மற் றும் வீடமைப்புக் கடன் ஆகியவற் றுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு நிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, கட்டடப் பொருட் கள் தொழில் மேம்பாட்டு இரா ஜாங்க அமைச்சர் இந்திக அனுருத் தவின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

உங்களுக்கு வீடு -நாட்டிற்கு எதிர்காலம் தேசிய வீடமைப்புத் திட்டம் மற்றும் வீட்டுக் கடன் வேலைத்திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவில் 43 பயனாளிக ளுக்கு வீடமைப்பு உதவி மற்றும் வீட்டுக் கடன் ஆகியவற்றுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

இங்கு உங்களுக்கு வீடு - நாட்டிற்கு எதிர்காலம் தேசிய வீடமைப்புத் திட்டத் தின் கீழ் 10 பயனாளிகளுக்கு வீடமைப்பு உதவி காசோலைகளும் வீட்டுக் கடன் வேலைத்திட்டத்தின் கீழ் 33 பயனாளிக ளுக்கு வீட்டை திருத்தி அமைப்பதற்காக வீட்டுக் கடன் காசோலைகளும் வழங்கப் பட்டன.

கௌரவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சி யின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எல்.ஆனந்த குமார் சமுக, கலாசார, அரசி யல் மற்றும் மனிதவுரிமைச ரர் சேவைகளை பாராட்டி சான்றிதழ் வழங்கி கௌரவிக் கப்பட்டுள்ளார்.

இலங்கைஒளிபரப்புக்கூட் டுத்தாபனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் RIZLI RUMI CEN-TER என்ற அமைப் பால் இவ்வாறு எல்.ஆனந்த குமார் கௌரவிக்கப்பட் டுள்ளார்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் அலுவலகத்தில் அரசியல் ஆலோசகரும் முதன்மை அதிகாரியுமான திருமதி பானு பிரகாசை இலங்கை புத்தகப் பூங்கா நிறுவுனர் புரவலர் ஹாசிம் உமர் மரீ யாதை நிமித்தமாக சந்தித்தார். இலங்கை - இந்திய தொடர்பாளர் மனவை அசோகனும் உடன் காணப்படுகின்றார்.

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக டி.எம்.எல்.பண்டாரநாயக்க கடமையேற்பு

கிண்ணியா,தோப்பூர், மூதூர், முள்ளிப்பொத்தானை, உவர்மலை நிருபர்கள்

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக இலங்கை நிர்வாக சேவை சிரேஷ்ட தர உத்தியோகத்தரான டி.எம்.எல்.பண்டார நாயக்க நேற்று செவ்வாய்க்கிழமை கடமை யேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாள ராகப் பணியாற்றிய சுதித் வணிகசிங்க ஓய்வுபெற்றுச் செல்வதால் ஏற்பட்ட வெற் றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பட்டதாரியான இவர் கனனிப் பல்கலைக் கழகத்தில் சிங்கள மொழியில் கலை முதுமாணிப் பட்டத்தினையும், அவுஸ்திரே லியா விக்டோரியா பல்கலைக்கழகத்தில் வியாபார முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

ஆரம்பத்தில் ஆசிரியராக நியமனம் பெற்ற இவர், பின்னர் இலங்கை கல்வி நிர் வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து கொழும்பு கல்வி அமைச்சில் உதவிக் கல்விப் பணிப்பாளராக இரு வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

அதன்பின் இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்த இவர், ஐப் புத்தளை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளராகவும் எல்ல பிரதேச செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். அதன்பின் ஊவா மாகாண சபைக்கு இட மாற்றம் பெற்ற இவர் மாகாணக் காணி ஆணையாளர், முகாமைத் துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவ கப் பணிப்பாளர், பயிற்சி மற்றும் ஆளணிபிரதிப் பிரதம செயலாளர் போன்ற பதவிகளையும் வகித் துள்ளார்.

தெங்கு அபிவிருத்தி அமைச்சு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு ஆகியவற்றில் மேலதிக செயலாளராகவும் பணியாற்றி யுள்ள இவர், கடந்த 3 வருடங் களாக அம்பாறை மாவட்ட செய லாளராக பணியாற்றிய நிலையில் நற்பேறாது கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராகக் கடமை யேற்றுள்ளமை குறிப்பிடத்தக் கது.

ஒரு இலட்சம் பனை மரங்கள் உருவாக்கும் வேலைத்திட்டம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுப்பு

வாழைச்சேனை நிருபர்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒரு இலட்சம் பனை மரங்கள் உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு நழுவிய நிதியில் பல பிரதேசங்களில் பனை விதைகள் நடும் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் தமிழ்த் தேசிய மக் கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் புஷ்பராஜ் நுஷானந்தன் தலைமையில் கிழக்கு கிழமை பாண்டி ருப்பு பிரதேசத்தில் பாண்டிருப்பு மகா வித்தியாலயத்திற்குப் பின்னுள்ள வீதி அருகாமையில் பனை விதைகள் நடும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இச் செயற்திட்டத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் த.அதிசயராஜ், பனை அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட

முகாமையாளர் த.விஜயன் மற்றும் பாண் டிருப்பு மகா வித்தியாலய அதிபர், ஆசி ரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு பனை விதைகளை மாண வர்களுக்கு வழங்கப்பட்டதுடன், நடும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் நாளுக்கு நாள் கொரோனா தொற்றாளர்கள் அதிகரிப்பு

கிழக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

முள்ளிப்பொத்தானை நிருபர்

கிழக்கு மாகாணத்தில் நாளுக்கு நாள் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்து வருவதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர். எம்.தௌபீக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்:

கடந்த அக்டோபர் மாதத்தில் குறைவ டைந்திருந்த கொரோனா தொற்றாளர்க ளின் எண்ணிக்கையில் நவம்பர் மாதத்தில் சிறிது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.அக் டோபர் மாதத்தில் சராசரியாக கிழமைக்கு 600 தொடக்கம் 650 என தொற்றாளர்க ளின் எண்ணிக்கை குறைவடைந்து வந்த நிலையிலும், நவம்பர் இறுதிப் பகுதியில் கிழமைக்கு 1000 தொற்றாளர்கள் இனங்கா ணப்பட்டனர்.

அம்பாறை பிராந்திய சுகாதார வைத் திய அதிகாரி பிரிவில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ள து.மாதாந்தம் செய்யப்படும் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளிலும் இனங்காணப்படும் தொற்றாளர்களின் வீதம் அடிப்படையில் ஒப்பிடும் போது செப்டெம்பரில்31 வீதமாகவும்,அக்டோபர் மாதத்தில் 21 வீதமாகவும் குறைவடைந்து இருந்தது.

இது நவம்பர் மாதத்தில் மீண்டும் 31 வீத மாக அதிகரித்துள்ளது. டிசம்பர் மாதம் இறு திக்குள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

சர்வதேச நாடுகள் உட்பட எமது நாட்டி லும் ஒமிக்ரோன் வகை கொரோனா வைரஸ் தொற்று இனங்காணப்பட்டுள்ளது. இது வேகமாகப் பரவக்கூடியது எனவும் இதனு டைய தாக்கத்தின் வேகமும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அளவும் மரணங்களின் வேகம் என்பன தொடர்பில் சரியான கணிப் புகள் இதுவரை கூறப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் காலம் பண்டிகைக் காலம் என்பதினால் பொது மக்கள் தமக்குத் தேவையான பாதுகாப்பை உறுதிப்ப டுத்திக்கொள்ள வேண்டும். அடிக்கடி சொல்லப்படுகின்ற முகக்கவசத்தை சரியாக அணிந்துகொள்வதும், சமூக இடைவெளி களைப் பேணி, அடிக்கடி கைகளை கழுவி தற்பாதுகாப்புகளை எடுத்துக்கொள்வது அவசியம்.

மேலும் கொரோனா தடுப்பூசியை தவ றாமல் பெற்றுக்கொள்வது அவசியம். கிழக்கு மாகாணத்தில் 95 வீதம் 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு முதலாவது தடுப்பூசி யும் 85 வீதமானவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 16 மற்றும் 20 வயதுடையவர்க ளுக்கு பைஸர் தடுப்பூசி 95 வீதமானவர்க ளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

அகில இலங்கை வை.எம்.எம். ஏ. பேரவை யின் தலைவர் சஜித் எம். ரிஸ்வியின் வழிகாட்டலின் கீழ் கம்பளை வை.எம்.எம். ஏ. யின் தலைவர் இஷ்திலான் முஹம்மட் முன் தலைமையின் கீழ் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட் மக்களுக் கான உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வு கம்பளை உடப்பளாத்த பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் 2500 ரூபா பெறுமதியான 100 பொதி கள் வழங்கப்பட்டதோடு, உடப்பளாத்த பிரதேச செயலகத்தின் உதவி செயலாளர் நிசாநாயக்கவும் கலந்துகொண்டு வழங் குவதை காணலாம்.

படம் : பானமுவ நிருபர்

LITRO GAS

உங்கள் பாதுகாப்பு எங்கள் கரிசனை

01 லிற்ரோ எரிவாயு சிலிண்டரை கொள்வனவு செய்யும் போது

1.1 லிற்ரோ எரிவாயு சிலிண்டரை நீங்கள் கொள்வனவு செய்யும்போது எப்போதுமே உத்தரவாதம் பெற்ற லிற்ரோ எரிவாயு விற்பனையாளரிடம் அல்லது விநியோகஸ்தரிடம் கொள்வனவு செய்யவும்.

1.2 சிலிண்டரில் ஏதேனும் எரிவாயு கசிவு அல்லது மணம் வருகின்றதா என பரிசேதித்து பார்க்கவும்.

1.3 சிலிண்டரில் எரிவாயு சரியான எடையில் உள்ளதா என பரிசோதிக்கவும்.

1.4 பாதுகாப்பு சீல் உரிய வகையில் உள்ளதா என பரிசோதித்துக்கொள்ளவும்.

02 லிற்ரோ எரிவாயு சிலிண்டரை களஞ்சியப்படுத்தும் போது அதை வைக்க வேண்டிய முறை

2.1 எந்நேரமும் நிலைக்குத்தான நிலையில் வைக்கவும்.

2.2 நல்ல காற்றோட்டம் உள்ள இடத்தில் வைக்கவும்.

2.3 தீ அல்லது நெருப்பு பற்றக்கூடிய பொருட்களுக்கு அருகில் வைக்க வேண்டாம்.

2.4 அவசரமான சந்தர்ப்பங்களில் மிக இலகுவாக அகற்றிக்கொள்ளக்கூடியவாறு தடை இல்லாத இடத்தில் வைக்கவும்.

03 லிற்ரோ எரிவாயு சிலிண்டர் பயன்பாட்டில் செய்யத் தாகாதவை

3.1 சிலிண்டரை பயன்படுத்தத் தயாராக முன் பாதுகாப்பு சீலை அகற்றுதல்.

3.2 சிலிண்டர்களை நில மட்டத்துக்கு கீழ் அல்லது கட்டிட அடித்தளம் (பேஸ்மன்ட்) என்பவற்றிற்கு அருகில் வைத்தல்.

3.3 சிலிண்டரை அங்கும் இங்கும் நகர்த்துதல், சிலிண்டரை கீழே கைவிடல்.

3.4 சிலிண்டரை சமையற்பாத்திரபீடத்தினுள் (Pantry cupboard) வைக்க வேண்டாம்.

3.5 பொருத்தமற்ற ஆயுதங்களை பயன்படுத்தி (ஆணி, திருகாணி (Screwdriver), போன்றவை) சிலிண்டர் வால்வில் ஏற்படும் கசிவை திருத்த முயல வேண்டாம். அவ்வாறு செய்தல் சிலிண்டர் வால்வில் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

04 உபகரண பாவனை மற்றும் பரிசோதனை முறை

4.1 எப்போதும் லிற்ரோ கேஸ் கம்பெனியினால் அனுமதிக்கப்பட்ட ரெகுலேட்டர்கள், ஹோஸ் குழாய் என்பவற்றை பாவிக்கவும். இவற்றை உத்தரவாதம் பெற்ற லிற்ரோ எரிவாயு விற்பனையாளர்களிடம் அல்லது விநியோக நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

4.2 ரெகுலேட்டர் மற்றும் எரிவாயு அடுப்பு என்பவற்றுடன் பொருத்தப்படும் ஹோஸ் குழாய் அதற்குரிய கிளிப் மூலம் இறுக்கமாக்கப்பட வேண்டும்.

4.3 ரெகுலேட்டர் மற்றும் ஹோஸ் குழாய் என்பவற்றில் துவாரங்கள், சிதைவுகள் அல்லது வாயுக்கசிவு உள்ளதா என பரிசோதித்துக்கொள்ளல் வேண்டும்.

4.4 ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை ரெகுலேட்டரையும், இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை ஹோஸ் குழாயையும் மாற்றவும்.

05 லிற்ரோ எரிவாயு சிலிண்டருக்கு ரெகுலேட்டரை பொருத்தும்போது

5.1 சிலிண்டரை நில மட்டத்திற்கு மேல் வைத்துக்கொள்ளவும் அதை விட உயரத்தில் எரிவாயு அடுப்பு இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்க.

5.2 எரிவாயு அடுப்பு அணைக்கப்பட்ட நிலையில் **(OFF position)** இருக்க வேண்டும் / ரெகுலேட்டர் அணைக்கப்பட்ட நிலையில் **(OFF position)** இருக்க வேண்டும்.

5.3 சூழலில் தீப்பற்றக்கூடிய வழிகள், தீச்சுவாலை அல்லது தீயை வெளியிடக்கூடிய மின் உபகரணங்கள் இல்லாதிருத்தல்.

5.4 ரெகுலேட்டர் "கிளிக்" எனும் சத்தம் கேட்கும் வரை சிலிண்டரின் வால்வுடன் அழுத்தப்பட வேண்டும்.

5.5 ரெகுலேட்டரை பொருத்திய பின் வாயுக்கசிவின் மணம் அல்லது சத்தம் ஏதும் உள்ளதா என பரிசோதித்துக்கொள்ளவும்.

5.6 உணவு சமைக்கும் போது கதவுகள் ஜன்னல் என்பவற்றை திறந்து வைக்கவும்.

06 சுயமாக பற்றிக்கொள்ளாத எரிவாயு அடுப்பை பற்ற வைக்கும் முறை

6.1 எரிவாயு அடுப்பின் மேற்பாகத்தை இறப்பர் ஹோஸ் குழாய் தொடாது இருப்பதை உறுதிபடுத்திக்கொள்ளவும்.

6.2 தீக்குச்சி அல்லது லைட்டர் (LIGHTER) ஒன்றை பற்றவைக்கவும்.

6.3 அந்த சுவாலையை பர்னர் அருகே கொண்டு செல்லவும்.

6.4 எரிவாயு அடுப்பின் வால்வை திறக்கவும் (ON)

6.5 எரிவாயு அடுப்பினை பற்றவைத்துக்கொண்டு தீக்குச்சி அல்லது லைட்டரை (LIGHTER) பற்றவைக்கவேண்டாம்.

07 எரிவாயு சிலிண்டர் பாவிக்கப்படாத சந்தர்ப்பத்தில்

7.1 எரிவாயு அடுப்பின் அனைத்து ஆளிகளையும் அணைத்திடுங்கள் (OFF)

7.2 ரெகுலேட்டரை சிலிண்டரிலிருந்து கழற்றாமல் ஆளியை (Switch OFF) நிலையில் வைக்கவும்.

7.3 நீங்கள் ஏதாவது சந்தர்ப்பங்களில் நீண்ட நாட்களுக்கு வீட்டைவிட்டு வெளியே செல்ல வேண்டி ஏற்பட்டால் அருகில் உள்ள லிற்ரோ கேஸ் விற்பனையாளர், விநியோகஸ்தர் அல்லது லிற்ரோ கேஸ் வாடிக்கையாளர் சேவைக்கு அழைத்து உதவியினைப் பெற்றுக்கொள்ளுங்கள்

08 சிலிண்டரிலிருந்து எரிவாயு கசிவு மணத்தை அல்லது எரிவாயு வெளியேறும் சத்தத்தை உணர்தல்

8.1 எரிவாயு அடுப்பு, எரியும் நெருப்பு சுவாலை அனைத்தையும் அணைத்து (OFF) விடவும்.

8.2 ரெகுலேட்டரை அணைத்துவிட்டு (OFF) சிலிண்டரின் வால்விலிருந்து கழற்றி விடவும்.

8.3 சிலிண்டர் வால்வினை பாதுகாப்பு மூடியினால் மூடிவிட்டு வீட்டுக்கட்டிடத்துக்கு வெளியே மிகவும் காற்றோட்டமான இடத்திற்கு சிலிண்டரை கொண்டு செல்லவும்.

8.4 காற்றோட்டத்தை ஏற்படுத்துவதற்காக எல்லா கதவு ஜன்னல்களையும் திறந்து வைக்கவும்.

8.5 எந்தவொரு மின்சார உபகாரணங்களையும் உபயோகிப்பதையும், ஆளி (Switch) போடுவதை தவிர்க்கவும்.

8.6 எரிவாயு கசிவு உள்ளதா என்பதை அறிய ரெகுலேட்டர், ஹோஸ் குழாய், எரிவாயு அடுப்பு என்பவற்றை பரிசோதித்துக்கொள்ளவும்.

8.7 எரிவாயு அடுப்பு, ரெகுலேட்டர், ஹோஸ் குழாய் தொடர்பாக சந்தேகம் ஏற்பட்டால் உத்தரவாதம் பெற்ற லிற்ரோ எரிவாயு விற்பனையாளர் அல்லது பயிற்சிபெற்ற தொழிநுட்ப உதவியாளரின் உதவியோடு பரிசோத்தித்துக்கொள்ளவும்.

8.8 இது சம்பந்தமாக லிற்ரோ கேஸ் வாடிக்கையாளர் சேவை 1311 என்ற இலக்கத்தில் அழைத்து உதவியை பெறவும்.

8.9 எரிவாயு கசிவினை தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் வரை எரிவாயு சிலிண்டரை மீண்டும் இணைக்க வேண்டாம்.

09

සිලින්ඩරය හිස් වූ පසුව ආරක්ෂිත වැස්ම සවිකොට අලෙවිකරුට අපසු බර දෙන්න

எரிவாயு சிலிண்டரில் எரிவாயு முடிந்தவுடன் பாதுகாப்பு மூடியை பொருத்தி எரிவாயு விற்பனையாளரிடம் மீள கையளிக்கவும்

ATTENTION

When the Cylinder is empty, place the safety cap and return it to the Dealer

வாடிக்கையாளர் சேவை இலக்கம்

மேலதிக தகவல்களுக்கு லிற்ரோ வாடிக்கையாளர் சேவையை அழையுங்கள்

For more information contact our Customer Care

1311

Fire and Rescue Service - 110 | Police - 119

Litro Gas Lanka Ltd,
No 267, Union Place, Colombo 02, Sri Lanka

litrogas.com

copyright

கல்முனை, பாண்டிருப்பில் ஊருக்குள் கடல் புகுந்ததில் ஆலயங்கள், வீடுகளுக்கு பாதிப்பு

கல்முனைக்குடி நிருபர்

கல்முனை மற்றும் பாண்டிருப்பு பிரதேசங்களில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு காரணமாக கடற்கரை வீதியையும் தாண்டி குடியிருப்புப் பகுதிக்குள் கடல் நீர் புகுந்து, வெள்ளக்காடாக மாறியதையடுத்து மாநகர சபையின் களாக இயந்திரங்கள் மூலம் கடல் நீரை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இப்பிரதேசத்தில் திடீரென கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதனால் கல்முனை மாமாங்க விநாயகர் ஆலயம் மற்றும் பாண்டிருப்பு விஷ்ணு ஆலயம் உள்ளிட்ட பகுதிகளும் பல வீடுகள், வளவுகளும் கடல் நீரில் மூழ்கி, பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதனால் இப்பிரதேச மக்கள் அச்சமும் கலவரமும் அடைந்த நிலையில், அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதையடுத்து கல்முனை மாநகர சபை உறுப்பினரான ஹென்றி மகேந்திரன், மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளர் ஆகியோருடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கியதையடுத்து, மாநகரசபையின் களாக இயந்திரங்கள் மூலம் அப்பகுதிகளில் தேங்கியுள்ள கடல் நீரை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மைக்காலமாக கல்முனை மற்றும் பாண்டிருப்பு பிரதேசங்களில் கடலரிப்பு வேகமாக ஏற்பட்டு வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கரையோரம் பேணல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் கற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் அவசர நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமெனக் கோரி கல்முனை மாநகர சபையில் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வீட்டார் உறங்கிய பின்னர் வெடித்துச் சிதறிய அடுப்பு

தம்பலகாமத்தில் சம்பவம்

மூதூர் நிருபர்

திருகோணமலை தம்பலகாமம் சிராஜ் நகர் பகுதியில் எரிவாயு வெடிப்புச் சம்பவம் ஒன்று திங்கள் இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் உறங்கும் போது திடீர் சத்தம் ஒன்று கேட்டது. அடுப்பங்கரை சென்று பார்த்தபோது அங்கிருந்த எரிவாயு வெடித்ததில் அடுப்பும் உடைந்து சேதமடைந்திருந்ததாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

எரிவாயு கசிந்து அடுப்பு வெடித்திருக்கலாம் என தெரியவருகிறது. உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

சம்பவ இடத்துக்கு தம்பலகாமம் பொலிஸார் நேற்றுக் காலை சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

ஹோன்சி கீழ் பிரிவில் காஸ் சிலிண்டர் வெடிப்பு

பொகவந்தலாவ நிருபர்

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா புளியாவத்த ஹோன்சி கீழ் பிரிவு தோட்டப் பகுதியில் உள்ள இரண்டு குடியிருப்புகளில் வைக்கப்பட்டிருந்த இரண்டு காஸ் சிலிண்டர்களில் ஒரு காஸ் சிலிண்டர் வெடித்துள்ளதாகவும் மற்றைய சிலிண்டரில் எரிவாயு கசிவு ஏற்பட்டுள்ளதாகவும் நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். காஸ் சிலிண்டரில் ஏற்பட்ட கசிவு மற்றும் வெடிப்பு தொடர்பில் ஹோன்சி தோட்ட இரண்டு குடியிருப்பாளர்களும் நோர்வூட் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவம் இடம்பெற்ற தோட்டப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

இந்த வெடிப்புச் சம்பவம் தொடர்பில் வீட்டில் இருந்தவர்கள் எவருக்கும் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லையென பொலிஸார் குறிப்பிட்டனர்.

வைத்தியர்களை நியமிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

முத்தல் நிருபர்

முத்தல் பிரதேச ககாதார வைத்தியஅதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட உடப்பு கிராமிய வைத்தியசாலைக்கு வைத்தியர்களை நியமிக்கக் கோரி நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் வைத்தியசாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று மக்களினால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பல்வேறு கலோகங்களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்கள் ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே!!கோயிலை மூடினாலும் வைத்தியசாலையை மூடாதே!! வேண்டும் வேண்டும் வைத்தியர் வேண்டும்! ஏழைகளாகிய எங்கள் உயிரை காப்பாற்றுங்கள்!!அப்பாவிகள் எங்கள் உயிரை காப்பாற்றுங்கள்!!போன்றகலோகங்களை அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

வவுனியா நகரில் ஒரே இரவில் ஐந்து கடைகளில் திருட்டு

வவுனியா நிருபர்

வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள 5 விற்பனை நிலையங்களில் ஒரே இரவில் திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

வவுனியாமில் வீதி, சூசைப்பிள்ளையார்குளம் வீதி, கந்தசாமி கோவில் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள விற்பனை நிலையங்களிற்கு சென்ற திருடர்கள் அவற்றின் கூரைத்தகடு மற்றும் வாயிலை உடைத்து உள்நுழைந்துள்ளதுடன், அங்கு வைக்கப்பட்டிருந்த பணத்தை திருடிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்தக் கடைகளை அதன் உரிமையாளர்கள் மூடிச்சென்றிருந்த நிலையில், நேற்றுக் காலை மீண்டும் திறப்பதற்காக வருகைதந்தபோது கடைகள் உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

நேற்று அதிகாலை வேளையில் இந்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன், இந்தக் கடைகளில் இருந்து பல இலட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக சி.சி.டீ.வி. கமராக்களின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டிய கலாமந்திர் நடனக் கல்லூரி அதிபர் திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவிகளும் திரு. திருமதி காயத்திரி சுவிந்திரனின் புதல்வி சுவஸ்திகா மற்றும் திரு. திருமதி உமா அசோகனின் புதல்வி தர்க்கா ஆகியோரின் அரங்கேற்றம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக சட்டமா அதிபர் சஞ்சே இராஜரட்னம் (ஜனாதிபதி சட்டத்தரணி) மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஈஷா ஸ்பெல்ட்டிஎன்ட், தெஹிவளை கேற்வே கல்லூரி அதிபர் திருமதி அன்டனி செல்லையா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

தனியார் ஆடைத் தொழிற்சாலை பஸ் விபத்தில் 26 பேருக்கு காயம்

மூதூர் நிருபர்

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி - திருகோணமலை பிரதான வீதியில் தனியார் ஆடைத் தொழிற்சாலைக்கு ஆட்கள் ஏற்றிச் சென்ற பஸ் விபத்தில் 26 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

கோமரங்கடவல பகுதியில் இருந்து கப்பல்துறை பகுதியில் உள்ள தனியார் ஆடைத் தொழிற்சாலைக்கு ஆட்களை ஏற்றிச் செல்லும் போது, வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ், வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

கப்பல்துறை சுதந்திர வர்த்தக வலயத்துக்கு அருகாமையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

"ஈழத்து நூன்" எழுதிய "தட்டுத் தாவாரம்" கவிதை நூல் அறிமுக விழா இன்று

பவள விழா நாயகன் பத்திரிகையாளர், எழுத்தாளர், கவிஞர், ''ஈழத்து நூன்'' எம்.ஏ.எம். நிலாம் எழுதிய 'தட்டுத் தாவாரம்' கவிதை நூல் அறிமுக விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு - 2, முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகமான தாருஸ்ஸலாம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உப தலைவி கலாபூஷணம் புர்கான் பீ. இப்திகார் (எம்.ஏ.) தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், பிரதம அதிதியாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் ''முஸ்ரீஸ் மில்லத்'' பேராசிரியர் கே.எம்.காதர் மொஹிதீன் கலந்துகொள்வதோடு, நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் எஸ்.எம். அமீன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மல்லியப்பூ சந்தி திலகர், கல்லொழுவை அல் - அமான் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் எம்.ரி.எம்.ஆஸிம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

நூலின் முதல் பிரதியை தொழிலதிபர் முஸ்லிம் சலாஹுதீன் பெற்றுக்கொள்வதோடு, டாக்டர் மௌலவி ஜலீல் கல்தான் (மன்பஈ) திருச்சி மாவட்ட அரசுடவுன், டாக்டர் வி.எஸ்.ஏ. ஷேக் முகமது கஸைல் (தலைவர், செயலாளர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி - திருச்சி), திருச்சி டாக்டர் எம்.கே. ஷாஹுல் ஹமீது (ஊடகவியலாளர் - மணிச்சுடர், மக்கள் குரல்) எழுத்தாளர்களான கே.ஜே. உமர்கயான், பழனி சஹான் ஆகியோர் அழைப்பு நிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் கல்விமான்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆடம்பெற்ற அரச ஆக்கிய சாஹித்திய விருது வழங்கும் நிகழ்வில் 2020 ஆம் ஆண்டுக்கான சிறந்த கவிதைத் தொகுப்புக்கான விருது சம்மாந்துறை சந்தக்கவி அச்சி மொஹம்மட் ஆசிரியர் எழுதி வெளியிட்ட 'எனது நிலவும் நிலமும்' என்ற கவிதைத் தொகுப்பு நூலுக்கு கிடைத்தது. இதற்கான விருதுடன் ஆக் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் அச்சி மொஹம்மட் காணப்படுகின்றார்.

படம்: சம்மாந்துறை நிருபர்

தனியார் காணியில் மோட்டார் குண்டு மீட்பு

முள்ளிப்பொத்தானை நிருபர்

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மெடியாவ வடக்குப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான வெற்றுக் காணியில் வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டொன்று மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்பலகாமம் விசேட பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்ததகவலின் அடிப்படையில் மோட்டார் குண்டுகள் திங்கட்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளன. கந்தளாய் நீதிமன்ற நீதவானின் அனுமதியின் பின் குறித்த மோட்டார் குண்டை செயலிழக்க வைப்பது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவ இடத்தில் தற்போது மோட்டார் குண்டு பொலிஸ் பாதுகாப்புடன் காணப்படுவதோடு, இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்குள் ஒமிக்ரோன் வைரஸினால் மூன்றாவது அலை ?

பிரபல விஞ்ஞானி எச்சரிக்கை

ஒமிக்ரோன் வைரஸினால் எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்குள், 3 ஆவது அலை இந்தியாவில் ஏற்படுமென கொரோனா கணிப்பு விஞ்ஞாநிபுணரும், இந்திய தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தின் விஞ்ஞானியுமான மனிந்திரா அகர்வால் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வைரஸ் பரவல் தொடர்பாக அவர் மேலும் கூறும்போது,

தற்போது உலகம் முழுவதிலும் பரவ ஆரம்பித்துள்ள ஒமிக்ரோன் வைரஸ் தாக்கமானது எதிர்வரும் (2022) பெப்ரவரி மாதத்திற்குள் 3 ஆவது அலை உச்சத்தை அடைந்துவிடும்.

இதனால், நாட்டில் தினமும் 1 இலட்சம் முதல் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்படலாமெனவும் ஆனால் 2 ஆவது அலையை விடவும் இந்த வைரஸ் பரவல் மிதமானதாகவே இருக்குமெனவும் கணித்துள்ளார். தற்போதைய புதிய மாறுபாடு, அதிகமாகப் பரவும் தன்மையைக் கொண்டது போல் தெரிந்தாலும் அதன் தீவிரம் டெல்டா வைரஸில் இருப்பது போல இல்லையெனவும் கூறியுள்ளார்.

இந்நிலையில், தென் ஆபிரிக்காவில் ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுப் பரவலை உன்னிப்பாக கவனித்து வருகின்றோம். தற்போது வரை, இந்த வைரஸ் தொற்றானது, தென் ஆபிரிக்காவிலுள்ள வைத்தியசாலைகளில், நோயாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யவில்லை.

ஆனால், அங்கு தொற்றுப் பரவல் மற்றும் வைத்தியசாலைகளில் நோயாளிகள் சேர்க்கை போன்ற நிலவரங்கள், எமக்கு தெளிவான முடிவுகளைத் தருமெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பிரதமர் மோடி-ரஷ்ய ஜனாதிபதி புடின் நேரில் சந்தித்துக் கலந்துரையாடல்

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். புதுடில்லியிலுள்ள ஹைதராபாத் இல்லத்தில், குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போது இந்தியப் பிரதமர் மோடி, கொரோனா தொற்று நோய்களின் போது கூட, இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளில் எந்த மாற்றமும் இல்லை.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான சிறப்பு மற்றும் சலுகை பெற்ற மூலோபாய கூட்டாண்மை வலுவடைந்து வருகின்றது. ஆப்கானில்தாலின் நிலைமை மற்றும் பிற பிரச்சினைகள் குறித்து இரு நாடுப் தொடர்பில் இருக்கின்றோம்.

அந்தவகையில், இரு நாடுகளும் கடந்த காலங்களில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளன. நாங்கள் ஒத்துழைப்பது மட்டுமல்லாமல், ஒருவருக்கொருவர் உணர்திறனையும் மனதில் வைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும், பிரதமர் மோடியுடனான சந்திப்பின்போது, இந்தியாவை ஒரு பெரிய சக்தியாகவும், நட்பான தேசமாகவும் நாங்கள் பார்க்கிறோம். நமது நாடுகளுக்கிடையேயான உறவுகள் தொடர்ந்து வளர்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நியுணர்களின் மாறுபட்ட கருத்துக்களினால் இந்தியாவில் பூஸ்டர் தடுப்பூசி வழங்குவதில் தாமதம்

இந்தியாவில், ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் 23 பேருக்கு பாதித்துள்ள நிலையில், கொரோனாத் தொற்றுவைரஸைக் கட்டுப்படுத்த, பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படுவது குறித்து, மத்திய அரசாங்கமே முடிவெடுக்க வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டது.

இதையடுத்து டில்லியில் நியுணர்கள் குழு சார்பில் இடம்பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படுவது குறித்து ஆராயப்பட்டது. 18 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்குவது தொடர்பாகவும், இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அப்போது நியுணர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் ஏற்பட்டன. பூஸ்டர் தடுப்பூசி தேவையில்லையென பலரும் கருத்து தெரிவித்தனர்.

கொவிட் பரவல் சூழ்நிலைக் கேற்ப, அடுத்த கட்ட முடிவை எடுக்கலாமென சில நியுணர்கள் தெரிவித்தனர். சில நியுணர்கள் மட்டுமே 3 ஆவது கட்டத் தடுப்பூசியை மத்திய சுகாதாரத்துறை உடனடியாகத் தொடங்க வேண்டுமென வலியுறுத்தினர்.

Nestl Health Science அறிமுகம் செய்யும் Nestl BOOST ORIGINAL

Nestl Health Science தனது சமீபத்திய தயாரிப்பான Nestl BOOST ORIGINAL இனை அறிமுகம் செய்துள்ளது. இது வயது முதிர்ந்தவர்கள்,ஆரோக்கியமானமற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை முன்னெடுப்பதற்கான சமநிலை உணவுத் தேவையின் ஒரு அங்கமாக அமையத்தக்க ஊட்டச்சத்து நிறைந்த உணவுப் பானமாகும்.

Nestl BOOST ORIGINAL தயாரிப்பானது தசை வலிமையை பேணிப் பராமரிப்பதற்கு உதவும் புரதச்சத்தையும், நோய் எதிர்ப்பு சக்திக்கு உதவும் விட்டமின் சி, டி, துத்தநாகம் மற்றும் இரும்புச்சத்து உள்ளிட்ட 16 விட்டமின்கள் மற்றும் கனிமப்பொருட்களைக் கொண்டுள்ளது. அத்துடன், குறைந்தளவிலான கொழுப்பு அடங்கிய தயாரிப்பு என்பதுடன், குறைந்தளவிலான கிளைசெமிக் (glycemic) கட்டெண்ணைக் கொண்டுள்ளது.

ஒரு வல்லுனர் அணியைக் கொண்டுள்ள குழுவான Nestl Health Science மக்களின் வயது முதிர்ச்சியில் அர்ப்பணிப்புடன் உதவுகின்றது. ஆரோக்கியமான வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கத்துடன், Nestl Health Science நிறுவனம் கிளத்தோறும் பலவிதமான உயர் தரத்திலான ஊட்டச்சத்து தயாரிப்புகளை வழங்கி வருவதுடன், அவை புத்தாக்கத்துடனான அறிவியலின் அடிப்படையில், விரிவான ஆராய்ச்சியின் உதவியுடன் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இனமை முதல் முதுமை வரை தலைமுறை தலைமுறையாக நுகர்வோருக்கு சேவைகளை வழங்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்ற ஒரு நிறுவனமாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய புத்தாக்கமான ஊட்டச்சத்து தீர்வுகளை நாங்கள் தொடர்ந்து அறிமுகப்படுத்தி வருகிறோம். முதியவர்களின் பல்வேறு ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் விசேடமாக வடிவமைக்கப்பட்டு, அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Nestl BOOST, இலங்கையில் அதிகரித்துச் செல்கின்ற முதிய தலைமுறையினருக்கு உதவும் என நம்புகிறோம் என நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஜேசன் அவஸ்சென்யா குறிப்பிட்டார்.

A. Baur Co. Pvt. Ltd நிறுவனத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்ற

Nestl BOOST ORIGINAL தற்போது நாடு முழுவதும் உள்ள கப்பர் மார்க்கட்டுக்கள், கடைகள் மற்றும் பாம்பகிகளில் 480 கிராம் அளவு கொண்ட பொதிகளில் கிடைக்கப் பெறுகிறது. Nestl Health Science நிறுவனத்தின் நம்பகமான மற்றும் நீண்டகால சத்தைப்படுத்தல் மற்றும் விநியோக பங்காளராக, எங்கள் தயாரிப்பு வரிசையில் Nestl BOOST ORIGINAL தயாரிப்பை சேர்ப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இந்த தயாரிப்பு வகையால் ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட சாதனையுடனான நற்சான்றுடன், Nestl BOOST ORIGINAL வெகு விரைவில் அவைத்து இல்லங்களிலும் உச்சரிக்கப்படுகின்ற நாமமாக மாறும் என்று நாங்கள் நம்புகிறோம். எங்கள் விற்பனை மற்றும் விநியோக வலையமைப்பில் பெரும் முதலீடுகளை மேற்கொண்டுள்ள நிலையில், இன்று நாம் நாட்டில் தொழில்நுட்ப ரீதியாக மிகவும் மேம்பட்ட மற்றும் சிறந்த நிறன் வாய்ந்த விற்பனை ஆணியைக் கொண்டுள்ள நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருவதுடன், Nestl BOOST ORIGINAL தயாரிப்பை மிகவும் திறமையான முறையில் சந்தையில் நிலைபெறச் செய்யத் தயாராக உள்ளோம் என்று A. Baur Co. Pvt. Ltd நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான ரோல்ஃப் பினேசர் குறிப்பிட்டார்.

சிறுவிளம்பரங்கள்

மணமகன் தேவை

1983, யாழிந்து பள்ளர், ரேவதி, Devopment Officer, கிரிமலை, பதிவு #6423, புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு. மற்றும் திருமணம் சரி வரும் போது தரகு கூலி இல்லை. Appointments 076 6649 401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd., No.91 - 4/2, Galle Road, Bamabalapity, Colombo - 04.

வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கிவரும் பிரபல ஹஸ் கிரீம் கடை ஒன்றிற்கு ஆண் வேலையாட்கள் தேவை. 20 - 45 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு - 077 3788746

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1585 | நிறம் சூதா
சீட்டிழுப்பு திகதி 2021.12.06 | தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
C 02 09 44 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 4,115,480/-

அதிகோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1411
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2021.12.06
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,447,280/-
வெற்றி இலக்கங்கள்
28 52 55 74
அம்சங்கள் வரிசை A
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி: 2021-12-06
வெற்றி வாரம்: 1791 | வர்ணம்: மஞ்சள்
கம்பர் ஜக்பொட் ரூ. 28,493,900/-
வெற்றி இலக்கங்கள்
26 52 53 59
அம்சங்கள் வரிசை J
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,385,540/-
எதிரணியும் கம்பர் பரிசுமொத்தம் ரூ. 28,619,560/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி: 2021-12-06
வெற்றி வாரம்: 3297
வர்ணம்: மஞ்சள்
கம்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வெற்றி இலக்கங்கள்
23 48 52 53
ரிஷபம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,375,000/-

சனிதா Sanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.12.06
சீட்டிழுப்பு இல: 3746
வர்ணம்: நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,906,940/-
வெற்றி இலக்கங்கள்
01 37 65 73
அம்சங்கள் வரிசை B
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Invitation for Bids (IFB)

DISTRICT SECRETARIAT - MANNAR

Calling Quotations for Cleaning Service& Security Service for District Secretariat and 5 Divisional Secretariats, Mannar District–2022
MN/GA/ADM/TENDER/GEN (2022)

01. The Chair person,Procurement Committee on behalf of the District Secretariat – Mannar now invites sealed bids from eligible and qualified bidders for Cleaning Service& Security Service for District Secretariat and five (5)Divisional Secretariats.
02. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements,

For Cleaning service

a. Bidders shall have valid business registration
b. The firm shall have its registered head office or branch in Northern Province.

For Security service

a. Bidders shall have valid business registration
b. Approval of the Ministry of Defense to provide security service
c. The firm shall have its registered head office or branch in Northern Province.

04. To qualify for award of the Contract, bidders shall meet the minimum qualifying criteria given in Section2 –Bidding Data.
05. Interested bidders may obtain further information from District Secretariat, Mannar and inspect the bidding documents at District Secretariat from 9.00hrs to 15.00hrs on working days from 08/12/2021 to 28/12/2021.
06. A Complete set of each Bidding Documents in English language may be purchase by interested bidders on the submission of a written application to the **"District Secretary, District Secretariat, Mannar"** from 08th December 2021 to 28th December 2021 from 09.00hrs to 15.00hrs upon.
07. Bids shall be delivered to District Secretariat, Mannar on or before 15.00 hrs of 29th December 2021. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

Ser.No	Bid Details	Non Refundable Amount	Bid Security Amount	Bid Validity Period
1.	Security Service - 2022	1,975.00	52,000.00	Up to 15.03.2022 (77 days)
2.	Cleaning Service - 2022	2,625.00	72,000.00	Up to 15.03.2022 (77 days)

08. For further details, please contacts, Procurement Division Tel No-0232222214,0232222213

A. Stanley De Mel
Chair person, District Procurement Committee,
District Secretariat ,Mannar
TP.No : 023 – 2222214,0232222213

Date: 06.12.2021

கொரோனாவுக்கு ப்ளாஸ்மா சிகிச்சை தேவையில்லை

உலக சுகாதார அமைப்பு

World Health Organization

கொரோனாவைரலால் பாதிக்கப்பட்டோருக்கு ப்ளாஸ்மா சிகிச்சை தேவையில்லை, என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: கோவிட்டால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களின்இ ரத்தத்தில் இருந்து ப்ளாஸ்மா பிரித்தெடுக்கப்பட்டு அதை கோவிட்டால் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையில் இருப்பவர்களுக்கு பயன்படுத்தப்பட்டது.

ஆனால், இந்த சிகிச்சை முறையில் எந்தப் பயனும் இல்லை. இதனால், தீவிர பாதிப்பு கொண்டோர் குணமடைந்ததாகவோ, வென்டிலேட்டரின் தேவை குறைந்ததாகவோ அதிகாரப்பூர்வ தரவுகள் இல்லை. எனவே, கோவிட் நோயாளிகளுக்கு ப்ளாஸ்மா சிகிச்சையை தவிர்க்கலாம். தீவிர தொற்று ஏற்பட்டவர்களுக்குக் கூட பரிசோதனை ரீதியாக மட்டுமே இவ்வகை சிகிச்சையை அளிக்கலாம்.

கோவிட் சிகிச்சைக்கு ப்ளாஸ்மாவை பயன்படுத்த உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்து. எனினும் சிகிச்சையில், தீவிரமற்ற, தீவிர, அதிதீவிர கோவிட் தொற்றாளர்கள் 16 ஆயிரத்து, 236 நபர்களிடம் நடத்தப்பட்ட 16 பரிசோதனைகளின் அடிப்படையில் பரிந்துரைத்ததாகவும், தற்போது மேம்படுத்தப்பட்ட ஆய்வில் ப்ளாஸ்மாவால் பலனிருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, பிளாஸ்மாசிகிச்சை தேவையில்லை. இவ்வாறு உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

மத விவகாரங்கள் மீதான அரசின் கட்டுப்பாடுகளை கடுமையாக்க வேண்டும்

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்

சீனாவில் தேசிய பாதுகாப்பை மேம்படுத்த மத விவகாரங்கள் மீதான அரசின் கட்டுப்பாட்டை கடுமையாக்க வேண்டும் என ஜனாதிபதி ஷி ஜின்பிங் கூறியுள்ளார்.

சீனாவில் மத விவகாரங்கள் தொடர்பான தேசிய மாநாடு தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்றது. இதில், ஷி ஜின்பிங் பேசியதாவது: மத விவகாரங்களில் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தி, நம்பிக்கைகளை 'சினமயமாக்குவதை' அரசு ஊக்கு விக்கும். சீன சூழலில் மதங்களை வளர்க்கும் கொள்கையை நிலைநிறுத்துவது இன்றியமையாதது. மத நம்பிக்கை கருத்திரம் குறித்த சீன கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை முழுமையாகவும் உண்மையாகவும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மதக் குழுக்கள் கட்சியையும் அரசையும் மக்களுடன் இணைக்கும் பாலமாக இருக்க வேண்டும்.

மதப் பிரமுகர்கள் மற்றும் நம்பிக்கையாளர்கள் முக்கிய சோஷலிச விழுமியங்களை வளர்ப்பதற்கும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும், சீன கலாசாரத்தை மேம்படுத்துவதற்கும் வழிநடத்தப்பட வேண்டும். மத நடவடிக்கைகள் சட்ட ஒழுங்கு விநியமுறைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்; குடிமக்களின் ஆரோக்கியத்தைக் கெடுக்கக் கூடாது; கல்வி, நீதி, நிர்வாக விவகாரங்கள் மற்றும் சமூக வாழ்க்கையில் தலையிடக் கூடாது என்றார் அவர்.

சீனாவில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மீதான கட்டுப்பாடுகள், மதங்கள் மீதான கண்காணிப்பு அதிகரித்துள்ளதாக ஹொங்கோங் கை சோர்ந்த 'சௌத் சீனா மார்னிங் போஸ்ட்' தெரிவித்திருந்த பின்னணியில் ஷி ஜின்பிங் பங்கேற்ற கூட்டம் நடைபெற்றுள்ளது.

சிரியா துறைமுகம் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல்

சிரியாவில் பெரும்பாலான இறக்குமதிகள் நடைபெற்று வரும் மிக முக்கிய துறைமுகத்தில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தி உள்ளது.

சிரியா நாட்டில் உள்நாட்டு போர் நடந்து வருகிறது. அங்கு

அரசு படைகளும், கிளர்ச்சியாளர்களும் சண்டையிட்டு வருகிறார்கள். இதில் ஏராளமான அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் சிரியா மீது இஸ்ரேல் நாடும் அடிக்கடி தாக்குதல் நடத்துவதாக குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. இந்த நிலையில் சிரியாவில் உள்ள துறைமுகம் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தி உள்ளதாக சிரியா ராணுவம் தெரிவித்துள்ளது. அந்நாட்டின் கடற்கரை நகரமானலதா கியாவில் உள்ள துறைமுகம் மீது இன்று அதிகாலை இஸ்ரேல் போர் விமானங்கள் ஏவுகணைகளை வீசி உள்ளன.

துறைமுகத்தில் உள்ள கண்டெய்னர் பகுதியில் பல ஏவுகணைகள் வீசப்பட்டன. இதில் அப்பகுதி முழுவதும் தீப்பிடித்து நாசமானது என்று ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக சிரியாவின் அரசு ஊடகம் தெரிவித்து இருக்கிறது.

மேலும் துறைமுகத்தில் பயங்கர வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும், கொள்கலன்கள் பகுதியில் தீ கொளுந்து விட்டு எரிந்ததாகவும், அங்கு நீயணைப்பு வாகனங்கள் விரைந்து சென்றதாகவும், சிரியா அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து ராணுவ தரப்பில் கூறும்போது, 'லதாகியா துறைமுகத்தில் ஏவுகணைகள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. அங்கு மீட்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தது.

சிரியாவில் பெரும்பாலான இறக்குமதிகள் லதாகியா துறைமுகத்தில் தான் நடந்து வருகிறது. அந்நாட்டின் மிக முக்கிய துறைமுகத்தில் தாக்குதல் நடத்தப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

இனி வாரத்தில் நாலரை நாள் மட்டுமே வேலை: ஐக்கிய அரபு நாடுகள் கூட்டமைப்பு அறிவிப்பு

அடுத்தாண்டு ஜனவரி 1ஆம் தேதி யிலிருந்து வாரம் 4.5 நாள் மட்டுமே வேலை நேரம் இருக்கும் என ஐக்கிய அரபு நாடுகள் கூட்டமைப்பு தெரிவித்திருக்கிறது.

ஐக்கிய அரபு கூட்டமைப்பு நாடுகளான ரஸ் அல் கைமா, அபுதாபி, சார்ஜா, துபை, அஜ்மன், உம்அல் குவைன் மற்றும் புஜைராவில் வருகிற 2022, ஜனவரி 1ஆம் திகதி முதல் புதிய பணி நேரம் அறிமுகமாக இருக்கிறது. அதன்படி, திங்கள்கிழமை முதல் வியாழக்கிழமை வரை காலை 7.30 முதல் மாலை 3.30 வரை 8 மணி நேர பணியும், வெள்ளிக்கிழமை காலை 7.30 முதல் மதியம் 12 வரை 4.30 மணி நேர பணியும் நடைமுறைக்கு வருகிறது. வெள்ளி மதியம் 1.15 மணிக்கு தொழுகை முடிந்ததிலிருந்து சனி, ஞாயிறு உள்பட 2.5 நாள்கள் விடுமுறை எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் குடும்பத்தை கவனிக்கவும் இந்த புதிய பணி நிட்டம் நடைமுறைக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால், ஐக்கிய அரபு நாடுகளில் பணியாரியும் ஊழியர்கள் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள்.

தற்போது, அரபு நாடுகளில் வெள்ளிக்கிழமை மட்டுமே விடுமுறை என்பது குறிப்பிடத்தக்கது.

எல்.பி.எல்.; காலி க்ளேடியேட்டர்சை வீழ்த்தியது கொழும்பு ஸ்டார்ஸ்

லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்.) ரி20 தொடரின் முன்றாவது லீக் போட்டியில், கொழும்பு ஸ்டார்ஸ் அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நிங்கட்கிழமை இரவு நடைபெற்ற இப்போட்டியில், கொழும்பு ஸ்டார்ஸ் அணியும் காலி க்ளேடியேட்டர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற காலி க்ளேடியேட்டர்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 116 ஓட்டங்களை பெற்றது.

இதில் பென் டன்ங் 38 ஓட்டங்களையும் இருக உதான ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும் பெற்றனர். கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் பத்து வீச்சில், தனஞ்சய டி சில்வா, துஷ்மந்த சமீர மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 117 என்ற இலகு வான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய கொழும்பு ஸ்டார்ஸ் அணி போராடி 17.3 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 118 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதில் நினேஷ் சந்திமல் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

காலி க்ளேடியேட்டர்ஸ் அணியின் பத்து வீச்சில், நுவான் துஷார மற்றும் புலின தரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் மொஹமட் ஹஃபீஸ் மற்றும் நூர் அஹமட் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக தனஞ்சய டி சில்வா தெரிவு செய்யப்பட்டார்.

எல்.பி.எல். தொடரிலிருந்து பினுர பெர்னாண்டோ நீக்கம்

லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்.) தொடரில் இருந்து கண்டி வோரியர்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர் பினுர பெர்னாண்டோ நீக்கப்பட்டுள்ளார்.

காயத்தில் இருந்து அவர் முழுமையாக குணமடையாததால், அணியில் இருந்து நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக மற்றொரு வீரரை அணி அறிவித்துள்ளது.

ரி 20 உலகக் கிண்ண போட்டியில் அபுதாபியில் நடைபெற்ற இலங்கை மேற்கிந்திய அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் போது பினுர பெர்னாண்டோ காயம் அடைந்தார். அவர் இன்னும் முழுமையாக குணமடையாததன் காரணமாக லங்கா பிரீமியர் லீக் தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில் இவருக்கு பதிலாக கண்டி வோரியர்ஸ் அணியில் கசுன் ராஜிதவை சேர்க்க நிர்மானிக்கப்பட்டுள்ளது.

பாக்., தொடரிலிருந்து பொலார்ட் விலகல்

பாகிஸ்தான் தொடரில் இருந்து பொலார்ட் விலகியுள்ளார்.

பாகிஸ்தான் சென்லும் விண்டீஸ் அணி, மூன்று 'ரி -20', மூன்று ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க உள்ளது. இதற்கான விண்டீஸ் அணி கப்டன் பொலார்ட் (34வயது), தொடையின் பின் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக இத்தொடரில் இருந்து விலகினார்.

தற்போது இதிலிருந்து மீண்டு வரத் தேவையான பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளார். 2022, ஜனவரியில் சொந்த மண்ணில் நடக்கவுள்ள அயர்லாந்து, இங்கிலாந்து தொடருக்கு முன் தயாராகி விடுவிட்டுள்ளார்.

பொலார்ட் விலகலை அடுத்து 'ரி -20' அணிக்குநிக்கோலஸ் பூரன் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். ஒருநாள் அணிக்கு முதன் முறையாக ஷாய் ஹோப் கப்டனாக தேர்வு செய்யப்பட்டார். பொலார்டுக்குப் பதில் ராவ்மென் பாவெல் ('ரி -20'), டேவன் தோமஸ் (ஒருநாள்) சேர்க்கப்பட்டுள்ளனர்.

அயர்லாந்து தொடருடன் கிறிஸ் கெயில் ஓய்வு பெறுகிறாரா?

அயர்லாந்து அணி, மேற்கிந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள், ஒரு ரி20யில் விளையாடவுள்ளது.

ஜமேக்காவில் நடைபெறும் 4 ஆட்டங்களும் ஜனவரி 8 முதல் 16 வரை நடைபெறவுள்ளன. ரி20 ஆட்டம் ஜனவரி 16 அன்று நடைபெறுகிறது.

ரி20 உலகக் கிண்ணத்துடன் ஓய்வு பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட கிறிஸ் கெயில், தனது கடைசி ஆட்டத்தைச் சொந்த ஊரான ஜமேக்காவில் விளையாட விருப்பம் தெரிவித்தார். அதேபோல அயர்லாந்துக்கு எதிரான ஒரே ஒரு ரி20 ஆட்டம் ஜமேக்காவில் நடைபெறவுள்ளது.

இதனால் இந்த ஆட்டத்தில் பங்கேற்று சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து கிறிஸ் கெயில் ஓய்வு பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒருநாள் அணியில் கிறிஸ் கெயில் இடம் பெறுவதற்கான வாய்ப்பு இல்லை என்றபோதும் கடைசி ஆட்டம் என்பதால் ரி20 அணியில் அவர் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

சொந்த மண்ணில் கிறிஸ் கெயில் கடைசியாக விளையாடி விடைபெறுவது பொருத்தமாக இருக்கும். அயர்லாந்துக்கு எதிரான ரி20 தொடர் அதற்கான வாய்ப்பாக அமையும் என மேற்கிந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் ஜொனி கிரேவ், கடந்த மாதம் பேட்டியளித்தார்.

42 வயது கிறிஸ் கெயில் 103 டெஸ்டுகள், 301 ஒருநாள், 79 ரி20 ஆட்டங்களில் விளையாடியுள்ளார்.

Printed at 267, Raja Mawatha , Ekala , Ja-ela and published by Asian Media Publications (Pvt) Ltd. at No 185, Grand pass Road, colombo -14 on Wednesday 08th of December 2021.